# ஆற்றல்



International
Current Affairs

சர்வதேச
சமகால செய்திகள்

16

- ஆய்வுகள் , அபிப்பிராயங்கள் ,
பின்னணிகள்


- 03 சர்வதேச சமகாலச் செய்திகள்.
- 06 முகாமைக் கணக்கீடு.
- 08 SIR DONALD GEORGE BRADMAN.
- 09 வங்கி நடைமுறையும் அதன் கடன் வசதியும்.
- 10 GLIMPSES OF ENGLISH LITERATURE.
- 12 வணிகக் கல்வியும் கணக்கீடும்.
- 15 காப்புறுதி.
- 26 உங்கள் கேள்விகள்....!!!
- 29 ஜெற் விமானம் தோன்றிய கதை


பொது அறிவு - சர்வதேச செய்தி

34 பக்கம்

10 /-

## ஒரு நிமிடம். . . .

அன்பு வாசகர்களுக்கு,

"தமிழரிடையே வாசிப்புப் பழக்கம் குறைவாகவே காணப்படுகின்றது. . வாசிக்கும் ஆர்வம் எம்மிடையே ஏற்படாத வரை. . . பயன் தரும் நூல்கள் வெளிவருவதும் கடினமே!"

**திரு. நா. வரதராசா, யாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளர்,** சென்ற மே மாதம் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில், **'கணிப் பொறி - 2000'** நூல் வெளியீட்டு நிகழ்வில் மேற்கண்டவாறு கூறினார்.

இவர் 'தமிழர்' எனக் குறிப்பிட்டது, பொதுவாக யாழ் மக்களையே சாரும். என் செய்வது, ! வாழ்விடம் பெயர்ந்து, இன்னலுறும் எம் சமுதாயத்தினது பற்றாத பொருளாதாரக் குறையும் 'வாசிக்கும் ஆர்வ எம்மிடையே குன்றியதற்கு' ஓர் பிரதான காரணமாகும். இக்குறையை நிவர்த்தி செய்யவே 'ஆற்றல்' சஞ்சிகை மலிவாகக் கிடைக்கின்றது.

விற்பனையை ஊக்குவிப்பதற்காக நாம் சில தள்ளுபடிகளை அறிமுகப்படுத்தினோம். முற்பணம் செலுத்துவோர்க்கு ரூபா 2/=ம், ஏனையோர்க்கு பிரதிக்கு ரூபா 1/= எனவும், அறிவித்தோம்.

பலன் பூஜ்ஜியம் தான்! முற்பணம் செலுத்தாதோரும்; மூன்று, நான்கு மாதங்களின் பின்னர் செலுத்தியோரும், எமது அறிவித்தலின் பலனை கூசாது பெற்றுள்ளனர். சிலர் தபாலகத்தில் பெற்ற காசுக் கட்டளையினது (மணி ஓடர் / Money order) மூலப்பிரதியை எமக்கு அனுப்பாது இன்னமும் வைத்துள்ளனர். இவ்வாறான இன்னல்களுக்கு மத்தியில் எம்மால் இயங்குவது இயலாதுள்ளது. ஆகவே, நாம் சென்ற இதழில் அறிவித்த தள்ளுபடித் திட்டத்தை இவ் அறிவித்தலால் "இல்லாது" செய்துள்ளோம்.

இதனால் பாதிக்கப்படும் : எமக்கு அறிவுரையும், ஊக்கமும், உற்சாகமும் தந்து எம்மை வழி நடாத்திய கல்விப்பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியை, ஆசிரியர்கள், சிரேஷ்டமாணவ , மாணவிகள் ஏனைய வாசகர்கள் அனைவரிடமும் மன்னிப்புக் கேட்டு நிற்கும்,

ஆசிரியர்.

1998 ம் ஆண்டு 08ம் இலக்க சட்டத்தின் பிரகாரம் '<u>தொண்டர் சமூக சேவை நிறுவனம்</u>' எனப் பதிவு செய்யப்பட்டது.
இலக்கம் : ஜே/ டிஎஸ்/ எஸ்எஸ்/ ஆமேஓ
திகதி : 12 - 07 - 1999.

* காசுக்கட்டளைக்கு பணம் பகிரும் இடம் : **சுண்டுக்குளி தபால் அலுவலகம்.**
* பணம் பெறுபவர்: **ஆற்றல் ஆசிரியர்.**

கடிதத் தொடர்பு : **ஆற்றல் 76 கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்**

## சர்வதேச சமகாலச் செய்திகள் :

வானொலி ஊடகங்களான BBC , VOA ஆகியவற்றின் World Today , News hour, News now போன்ற செய்தி நிகழ்ச்சி நிரல்களில் கேட்டவற்றையும் , Newsweek, Time, Economist போன்ற சஞ்சிகைகளில் வாசித்துக கிரகித்தவைகளையும் தொகுத்து இப் பகுதி எழுதப்பட்டுள்ளது.

1) Zimbabwe – பிரதமர்; Dr.Robert Mugabe யினது அராஜக அரசாங்கத்திற்குப் பக்க பலமாக உள்ளது "War Veterans'' என்னும் அமைப்பு, இவர்கள் முகாபேயின் தலைமையின் கீழ் சுதந்திரத்திற்காக British அரசாங்கத்திற்கு எதிராக போராடி இளைப்பாறிய கெரில்லா போராளிகள் .

அந்நாட்டில் தற்போது வெள்ளை இன மக்களுக்கெதிராக அராஜகம் தாண்டவம் ஆடுகின்றது. அதே சந்தர்ப்பத்தில் மேற்குலக நாடுகளிற் சில அபிவிருத்திக்கான உதவிகளையும் மேற்கொண்டுள்ளன . இவற்றில் Canada நாடு 3 வருடங்களில் 300 கோடி பெறுமதியான அபிவிருத்தித் திட்டம் ஒன்றினை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது.

இந் நிலையில் அத்திட்டத்திற்கு பொறுப்பான, கனடா நாட்டுப் பிரஜையான, "வெள்ளையர்" ஒருவரை முகாபேயினது "War Veterans." அமைப்பினது அங்கத்தவர் ஒருவர் தாக்கியுள்ளார் . இச் சம்பவம் இவ்வருடம் மே மாத தொடக்கத்தில் நடந்தது. இத் தாக்குதலுக்கு ஒரு வார காலமாக "ஸிம்பாப்பே" அரசாங்கம் எதுவிதமான நடவடிக்கையும் எடுக்காததால் "கனடா" தனது அபிவிருத்தித் திட்டங்களை நிறுத்தியுள்ளது. முகாபே அரசாங்கத்திற்குச் சொந்தமான இரு பத்திரிகைகள் Herald, and Sunday Mail, அங்குள்ளன . இவைகளின் ஆசிரியர்கள் இருவரும் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். எதிர்க்கட்சியினரது பத்திரிகை அச்சகம் ஏற்கனவே ஓர் குண்டினால் தகர்க்கப்பட்டுள்ளது.

மேலும், அண்மையில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில், வன்செயல்கள் நடைபெற்றதால், 53 ஆசனங்களின் தேர்தலை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

'டொக்ரர் றோபேற் முகபே'' யினது ஆட்சி மிகவும் மோசமானதென சர்வதேச நாடுகள் கூறுகின்றன.

2) Italy - Silvio Berlusconi , பல கோடீஸ்வரக் கொம்பனிகளுக்கு தலைவர்; நாட்டின் 6 TV ஸ்ரேசன்களில் 3க்கு உரிமையாளர் (ஏனைய 3 ம் அரசாங்கத்தினது)

இவ் வருடம் மே மாதம் நடந்த தேர்தலில் அமோக வெற்றி பெற்று பிரதமரானார். பல சீர்திருத்தங்களை அறிமுக்பபடுத்துவதாக வாக்குறுதி அளித்துள்ளார்.

தற்போதைய அரசியல் யாப்பு 1946 ம் ஆண்டு "விகிதாசார பிரதிநிதித்துவம்" என்ற முறையில் இயற்றப்பட்டது. இது வரை 50 க்கும் மேலான (ஆண்டுக்கு ஒன்றென) அரசாங்கங்கள் ஆட்சியில் அமர்ந்து, கட்சித் தாவலால் கவிழ்ந்து வீழ்ந்தன..

ஆதலால், இத்தாலி மக்கள் **"ஸில்வியோ பேலுஸ்கோனி"** யிடம் இருந்து திடமான அரசாங்கம் அமைக்கக்கூடிய சீர்திருத்தங்களை எதிர் பார்க்கின்றனர் .

பேலுஸ்கோனியினது பெயரை ஓர் உள்நாட்டுப்பத்திரிகை இவ்வாறு பிரசுரித்திருந்தது **: செவ்விய மோனிஸ்கோடி.**
இதை கவலையீனம் கலந்த பேய்க்காட்டல் என்றே கூறவேண்டும்.

**3) East Timor** -24 வருடங்கள் "ஜெனறல் சுகாற்ரோ" வினது அராஜக ஆட்சியில் அல்லலுற்ற "கிழக்கு திமோர்", இப்போது இந்தோனேசியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்றுள்ளது.

சுதந்திரம் பெற்ற காலத்தில் ஏற்பட்ட வன்செயல்களில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர் . 2 ½ லட்சம் மக்கள் மேற்கு திமோரில் இன்றும் அகதிகளாக, சுதந்திரத்திற்கு எதிராக இயங்கிய பயங்கரவாதிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளர்.

இந்நிலையில கிழக்குதிமோரது கத்தோலிக்க சபையின் ஆயர் பெலோ ( Bishop Belo ) அக்கிரமம் செய்தோரை மன்னித்து நாட்டிற்கு சுபீட்சத்தை அபிவிருத்தி மூலம் பெற வேண்டும் என வலியுறுத்துகின்றார். இவருக்கு 2000ம் ஆண்டினது "அமைதி/ சமாதானத்திற்கான" "நோபல் பரிசு" வழங்கப்பட்டது.

Sweden நாட்டவரான Alfred Nobel ஸ்தாபித்ததே' Nobel Prize. சகல பரிசில்களையும் ஸ்வீடன் நாட்டின் ஓர் குழு வழங்கும் . அமைதி / சமாதானம் பரிசை மட்டும் நோர்வே நாட்டினது குழு ஒன்று தீர்மானிக்கும் .

4) RUSSIA-- பன்நாட்டு கூட்டு முயற்சியில் 'சர்வதேச விண்வெளி ஸ்தாபனம்' ஒன்று விண்வெளியில் அமைக்கப்படுகின்றது. இதற்குச் செல்வதற்கு அமெரிக்கா **Endevour** என்னும் கலத்தையும்; **Souyz** என்ற கலத்தை றஷ்யாவும் பாவிக்கின்றனர்.

உலகின் 400 நபர்களே விண்வெளியில் பயணம் செய்துள்ளனர். இவர்கள் சகலரும் "விண்வெளி" ஆராச்சியில் ஈடுபட்டோரே ! இவர்கள் தமது பிரத்தியேக தரத்தினை வெகு கவனமான அக்கறையுடன் பாதுகாக்கின்றனர்.

Dennis Tito என்னும் அமெரிக்க கோடீஸ்வரர் விண்வெளியில் பயணிக்க ஆசை கொண்டார் . அமெரிக்க விண்வெளி ஆராச்சி நிலையமான "NASA" இவரது விண்ணப்பத்தை நிராகரித்தது.

NASA வில் தொழில் புரிந்து பின்னர் சுயமுயற்சியால் கோடீஸ்வரரான டெனிஸ் ரிரோ திடமான மனத்துடன் றஷ்யாவை அணுகினார். பேரம் பேசினார் . 20 மில்லியன் டொலர்கள் கொடுத்தார். 7 மாதங்களாக விண்வெளி வீரர்களது பயிற்சி பெற்றார். NASA வினது கடும் எதிர்ப்புக்கள் மத்தியில் ,இவ் வருடம் 4ம் மாதம் உலகின் முதலாவது விண்வெளி உல்லாசப்பயணியாக "ஸொயுஸ்" கலம் மூலம் ' சர்வதேச விண்வெளி ஸ்தானம் ` சென்றடைந்தார்.

5) **Japan** - முன்னைய பிரதமர் Yoshiro Mori யினது தலைமைத்துவத்தில் அதிருப்தி கொண்ட கட்சி உறுப்பினர் புதியதோர் தலைவரைத் தேர்ந்தெடுத்தனர்.

Junichiro Koizumi, 59 வயது, புதிய தலைவராக பதவி ஏற்றார். முறையே அவரே புதிய யப்பானிய பிரதமராகவும் பணியாற்றத் தொடங்கியுள்ளார். இவர் முன்னாள் பொது நல, சுகாதார அமைச்சராக பணியாற்றியவர். பெருமளவு மதிக்கப்படுபவர் .வழமை போன்று கட்சியின் ஆதிக்கத்திற்குள் சிக்காது, சுயமாக தனது அமைச்சர்களை தானே தேர்ந்தெடுத்தார். கூட்டாட்சியில் உள்ள சிறுபான்மை கட்சிகளுக்கும் அமைச்சரவையில் இடம் கொடுத்தார்.

மேலும், முக்கிய ஐந்து அமைச்சுகளின் தலைமைப்பீடத்தில் பெண்களை நியமித்தார். இவர்களில் ஒருவர் செல்வி "ரனாகா'' முன்னாள் பிரதமரின் மகள், சாதுரியமாகவும் துடுக்காகவும் பேசி எதிரியை தலைகுனியச் செய்வதில் மிகவும் கெட்டிக்காரி . யப்பானிய சரித்திரத்திலேயே இம் முறை தான் பெண்களுக்கு இத்தகைய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

6) **Indonesia** - ஊழல் குற்றச்சாட்டை பாராளுமன்றம் விசாரணை செய்து, தன்னை பதவி நீக்கம் செய்தால் இரத்தக்களரி உருவாகக் கூடும் என மறைமுக எச்சரிக்கை விடுத்த ஜனாதிபதி அப்துல்றஹ்மான் வாகீட் இராஜினாமா செய்து விட்டார்.

இவரது பாட்டனார் உருவாக்கிய Naholatul Ulama என்னும் பிரதான முஸ்லீம் அமைப்பிற்கு 15 வருட காலம் தலைமை தாங்கிய பின்னர், 1999ல், ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

( தொடர்ச்சி 17 ஆம் பக்கம் )

**கடைசியாகச் சிரிப்பவனே ... சிறப்பாகச் சிரிப்பவன் .**

சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்னர் Albert Enstien கூறினார் "எனது கணிப்பின்படி பிரபஞ்சத்தில் கோள்கள் ஒன்றை ஒன்று ஈர்க்கும் சக்தியைப போன்று, ஒன்றை ஒன்று தள்ளும் சக்தியும் இயங்குகின்றது".
இந்த எண்ணக்கருவை எல்லோரும் நையாண்டி செய்து நிராகரித்தனர். ஆனால் இன்று Hubble telescope ன் மூலம் 'தள்ளும் ` சக்தியால உந்தப்பட்டு ஓர் நட்சத்திரம் வெடித்துச் சிதறியதை விஞ்ஞானிகள அவதானித்துள்ளார்கள் .

இதனால் அன்று அல்பேற் ஈன்ஸ்ரைன் கூறியது சரியானதே என ருசுப்படுத்தப் பட்டுள்ளது. அன்று சிரித்தோர் .... இன்று மௌனம் .

ஆதாரம்: TIME/ ARRIL 16,2001

# முகாமைக் கணக்கீடு
# Management Accounting

ஆக்கியோன் : S.D.J சுதர்சன்

எமது 13 வது இதழான 2000 சித்திரை மாத சஞ்சிகையில் இக் கட்டுரைத் தொடர் வெளிவரத தொடங்கியது.

சென்ற இரு இதழ்களான 14வது, 15வது சஞ்சிகைகளில், இடமின்மை காரணமாக, இத்தொடர் வெளிவரவில்லை. இதுவே இரண்டாவது தொடர்பகுதி.

## கணக்கீட்டு விகிதங்கள்
## ACCOUNTING RATIOS

க.பொ.த.உயர்தரம், மற்றும் உயர்கல்வி மாணவர்களுக்கு பயன்படக்கூடிய வகையில், புதியவிடயங்கள உள்ளடக்கி, விசேடமாகத் தொகுக்கப்பட்டது.

[இ] பங்குதாரர் முதல் மீதான வருவாய் வீதம்

பங்குதாரர் நிதிக்கும் வரி கழித்த பின் தேறிய இலாபத்துக்கும் இடையிலான தொடர்பினை நூற்று வீதத்தில் விளக்குவதே பங்குதாரர் முதல் மீதான வருவாய் வீதம் ஆகும்.

$$\text{பங்குதாரர் முதல் மீதான வருவாய் வீதம்} = \frac{\text{வரி, அசாதாரண விடயம் கழித்தபின் இலாபம்}}{\text{பங்குதாரர் நிதி}} \times 100$$

[ஈ] சாதாரணபங்குதாரர் முதல் மீதான வருவாய் வீதம் [உரிமை மூலதனம் மீதான உழைப்பு வீதம்]

சாதாரண பங்குதாரர் நிதிக்கும் முன்னுரிமைப் பங்கு இலாபத்தினை கழித்த பின் உள்ள இலாபத்துக்கும் இடையிலான தொடர்பினை நூற்றுவீதமாகக் கூறுவதே உரிமை மூலதனம் மீதான வருவாய் வீதம் ஆகும்.

$$\text{உரிமை முதல் மீதான வருவாய் வீதம்} = \frac{\text{வரிக்குப் பின் இலாபம் - முன்னுரிமைப் பங்குலாபம்}}{\text{சாதாரண பங்குதாரர் முதல்}} \times 100$$

மூலதன வருவாய் வீதம் முதலீட்டாளருக்கு உதவும் வழிகள்

(01) இலாபகரமான முதலீடுகளைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

(02) முதலீட்டுக்கு ஏற்ப இலாபம் கிடைக்கின்றதா என்பதனை அறிந்து கொள்ளலாம்.

(03) கடந்த காலத்துடனும் இதே போன்ற ஏனைய நிறுவனங்களுடனும் ஒப்பீடு செய்து நிறுவனத்தின் முகாமைத்திறனை மதிப்பிட்டுக் கொள்ளலாம்.

## [03] செயற்பாட்டு விகிதங்கள்- OPERATING RATIOS

நிறுவனத்தில் காணப்படும் சொத்துக்கள் எந்தளவு வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதனை அளவிட உதவும் வீதங்கள் செயற்பாட்டுவீதங்கள் ஆகும்.

செயற்பாட்டு வீதங்கள் வருமாறு :

3:1 இருப்பு புரள்வு விகிதம்
3:2 கையிருப்பு உடமைக்காலம்
3:3 கடன்பட்டோர் புரள்வு விகிதம்
3:4 கடன்பட்டோர் பணம் சேகரிக்கும் காலம்
3:5 கடன்கொடுத்தோர் சுழற்சி விகிதம்
3:6 கடன்கொடுத்தோருக்கு பணம் செலுத்தும் காலம்
3:7 சொத்து சுழற்சி விகிதம்

### 3:1 இருப்பு புரள்வு விகிதம் - STOCK TURN OVER RATIO.

வியாபார இருப்புக்கள் விற்பனையாக மாறக்கூடிய வேகம் அளவு ரீதியாக மதிப்பிட உதவும் வீதம் ஆகும். அதாவது விற்றசரக்கின் கிரயத்துக்கும் சராசரி இருப்புக்கும் இடையிலான தொடர்பினை விளக்குவதே இருப்பு சுழற்சி ஆகும்.

$$\text{இருப்பு சுழற்சி விகிதம்} = \frac{\text{விற்ற சரக்கின் கொள்விலை}}{\text{சராசரி இருப்பு}}$$

### 3:2 கையிருப்பு உடமைக்காலம் [கையிருப்பு தினங்களின் எண்ணிக்கை ]

சராசரியாக பேணப்படும் கையிருப்பு சாதாரண பாவனைக்கமைய எவ்வளவு நாட்களுக்கு பயன்படுத்த முடியும் என்பது கையிருப்பு தினங்களின் எண்ணிக்கை' ஆகும்.

$$\text{கையிருப்பு தினங்களின் எண்ணிக்கை} = \frac{\text{சராசரி இருப்பு X 365}}{\text{விற்பனை கிரயம்}}$$

அல்லது

$$\text{கையிருப்பு தினங்களின் எண்ணிகை} = \frac{365}{\text{இருப்பு புரள்வு விகிதம்}}$$

### 3:3 வருமதியாளர் சுழற்சி விகிதம் - DEBTORS TURN OVER RATIO

ஒரு வருடத்தில் வருமதியாளர்கள் எத்தனை தடவைகள் பணத்தினை செலுத்தியுள்ளார்கள் என்பதனை 'கடன்பட்டோர் புரள்வு விகிதம்' குறிக்கும்.

$$\text{கடன்பட்டோர் புரள்வு விகிதம;} = \frac{\text{கடன் விற்பனை}}{\text{சராசரி கடன்பட்டோர்}}$$

( தொடர்ச்சி 23 ம் பக்கம் )

# SIR DONALD GEORGE BRADMAN
# THE GREATEST CRICKET BATSMAN EVER:

Lanka Monthly Digest ல் மகிந்த விஜேசிங்ஹ எழுதிய கட்டுரையைத் தழுவியது.

சர்வதேச (ரெஸ்ற்) கிறிக்கற் போட்டிகளில் மூன்றாம அம்பயர் நியமிப்பதற்கான எண்ணக்கருவை மகிந்த விஜெசிங்ஹ முன் வைத்தவர். இவர் கிறிக்கற் உலகில பல கட்டுரைகள் எழுதியுள்ளார்.

கிரிக்கற் உலகில் பற்பல சாதனைகள் உள்ளன. ஓட்டங்கள் பெற்றதும், விக்கற்கள் வீழ்த்தியதும, கச்கள் பிடித்ததும் நாம் பொதுவ கேள்விப்பட்டவையே. ஆனால், ஓர் அணியின் "தனிப்பட்ட" வீரனை வீழ்த்த வேண்டும் என்கின்ற ஒரே குறிக்கோளாக பயிற்சிகள் தரப்பட்டு, அந்த தனிப்பட்ட வீரனது உடம்பில் காயம் ஏற்படும் எனப் பயமுறுத்தி, அவனைச் சரளமாக விளையாட இடமளிக்காமல், தாம் வெற்றியீட்ட வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டதே Body Line Bowling. சாதனை போற்றப்பட வேண்டியதே, ஆனால் இதை என்னவென்பது?!

ஆடும் Batsman னது உடம்பை குறி வைத்து போடுவதே Bodyline Bowling . இதனை Douglas R. Jardine, இங்கிலாந்து Captain, வெகு இரகசியமாகத் தனது Bowlers க்கு பயிற்சியளித்தார். இது விளையாட்டின் சட்டதிட்டங்களுக்கு புறம்பானதில்லை. ஆனால், இது ஓர் அடாத்தான செயல் என சகலரும் கருதுவர் என்பது தெளிவு.

Australia சென்ற இங்கிலாந்து அணி Don Bradman க்கு எதிராகவே இந்த Bodline Bowling னை உபயோகித்தது. அவரது ஆட்டத்திற்கு அவ்வளவு பயம்!

அந்தச் சுற்றில் Bodyline Bowling க்கு அவர் கொடுத்த பதில்கள் :
Melourne ரெஸ்றில் 103 , ஆட்டம் இழக்காமல், Adelaide இல 66 , Brisbane ல் 76, Sydney யில் 71, ஐந்தாவது ரெஸ்ற் நடைபெறவில்லை

ஓர் தனிப்பட்ட " Bastsman" இவ்வாறு அடாத்தாகத் தாக்கப்பட்டும், அவர் திறமாக ஆடினார். சம்பந்தப்பட்டோரும்; அவர்களைச் சார்ந்த நாடும் வெட்கித் தலை குனிந்தது.

ஆத்திரமடைந்த தனது அணியினரையும் நாட்டவரையும் பெருந் தன்மையாக Bradman தேற்றினார்.

( தொடர்ச்சி 22 ஆம் பக்கம் )

# வங்கி நடைமுறையும் அதன் கடன் வசதியும்

க. பாலசுப்பிரமணியம்,
பிரதேச முகாமையாளர் ,
இலங்கை வங்கி,
யாழ்ப்பாணம்.

வே. ஐயம்பெருமாள்,
முகாமையாளர் ,
இலங்கை வங்கி,
பிரதேசக் காரியாலயம்,
2-ம்கிளை,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கடன் வசதிகளைப் பொறுத்தவரை இலாப நோக்கத்தைக் கருத்தில் கொள்ளாது அபிவிருத்தித் திட்டங்களை ஊக்குவிக்கும் பலவித கடன் திட்டங்கள் காலத்திற்குக் காலம் இலங்கை வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்டு வந்துள்ளன. பின்வரும் செயற்பாடுகளுக்கான கடன் திட்டங்கள் இன்றும் நடைமுறையிலிருக்கின்றன. ஆனால் துரதிருஷ்டவசமாக போர் காரணமாகவும், அதனால் ஏற்பட்ட இடப்பெயர்வுகள் காரணமாகவும் மற்றும் போக்குவரத்து, மின்சாரம் உள்ளீடுகள் இல்லாமை போன்ற காரணங்களாலும் யாழ் மாவட்டத்தில் இக்கடன் திட்டங்களை நாம் முழுமையாகச் செயல்படுத்த முடியாமலிருக்கின்றோம்.

(1) விவசாய உற்பத்தி.
(2) மீன்பிடி உபகரணங்கள் கொள்வனவு.
(3) சுய தொழில் முயற்சிகள்.
(4) சிறிய, நடுத்தர கைத்தொழில் திட்டங்கள்.

இனி நாம் கடன் வழங்கும் போது கைக்கொள்ளும் நடவடிக்கைகளையும், கடன் பெறுவோரிடமிருந்து வங்கி எவற்றை எதிர்பார்க்கின்றது என்பதையும் சுருக்கமாகப் பார்ப்போம்.

(1) நேர்மை.
(2) கடனைத் திருப்பிச் செலுத்தும் தகைமை.
(3) நிபந்தனைகள்.
(4) முதலீடு.
(5) பிணை.

மேற்கண்ட தகுதிகளை பொதுவாக ஒரு வங்கி கடன் பெறுவோரிடம் எதிர்பார்க்கும். ஒருவர் நேர்மையாக இருந்தால் தான் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற மனநிலை அவருக்கு வரும். ஆகவே நேர்மை எதிர்பார்க்கப்படுகின்றது. இரண்டாவதாக எடுத்த கடனைத் திருப்பிச் செலுத்தும் தகைமை அவருக்கு இருத்தல் வேண்டும். எடுத்த கடனை முதலீடு செய்து அதில் லாபம் காணாவிட்டால் கடனை எப்படி திருப்பிச் செலுத்துவது?

( தொடர்ச்சி 24 ஆம் பக்கம் )

யாழ் பல்கலைக்கழக ஆங்கில முதுநிலை விரிவுரையாளர். Mr. V.SIVARAJASINGHAM எமது 7வது " ஆற்றல் " இதழில் A POISON TREE என்னும் WILLIAM BLAKE எழுதிய மனோதத்துவ ரீதியான கவிதையை வெகு நயமாக விளக்கியிருந்தார்.

1999ம் ஆண்டு SEPTEMBER (புரட்டாதி) மாதம் வெளிவந்த இவ விளக்கக் கட்டுரை முற்று முழுதாக ஆங்கிலத்திலேயே இருந்தது.

பலரது வேண்டுகோளின்படி நாம் ஆக்கியோனிடம் அதனது தமிழாக்கத்தை வேண்டினோம். போதாத காலம் அவரால் இத் தமிழாக்கத்தினை உருவாக்கித் தர போதிய நேரம் கிட்டவில்லை.

இருந்தும், கவிதைப் பிரியர்களது தாகத்தைக் தணிக்க முருகையன் 1964ம ஆண்டு பிரசுரித்த " ஒரு வரம் " என்னும் மொழிபெயர்ப்புக் கவிதைக கொத்தின் தமிழாக்கத்தைத் தருகின்றோம்.

அத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கென, மூலக் கவிதையையும், 'ஆற்றல்' சஞ்சிகையில் சிவராஜசிங்கம் அவர்களால் எழுதப்பட்ட விளக்கத்தையும், மீண்டும் தருகின்றோம்.

# GLIMPSES OF ENGLISH LITERATURE

Mr. V.Sivarajasingham
Department of Linguistics
University of Jaffna.

For GCE O/L English Literature (Poetry)

## 'A POISON TREE'

By William Blake

I was angry with my friend
I told my wrath, my wrath did end.
I was angry with my foe:
I told it not, my wrath did grow.

And I watered it in fears,
Night and morning with my tears,
And I sunned it with smiles,
And with soft deceitful wiles.

And it grew both day and night,
Till it bore an apple bright;
And my foe beheld it shine,
And he knew that it was mine.

And into my garden he stole
When the night had veiled the pole
In the morning glad I see
My foe outstretched beneath the tree.

**நச்சு மரம்**

கோபம் கொண்டேன் தோழன் மீதில்
கோபம் சொன்னேன் குளிர்ந்து தீர்ந்தது
கோபம் கொண்டேன் தீய பகைவனில்
கூறினேன் அல்லேன், வளர்ந்தது கோபம்.

அச்சத்துடனே அதற்கு நீர் வார்த்தேன்
அல்லும் பகலும் கண்ணீர் ஊற்றினேன்;
எத்தும் சூதும் இயைந்த முறுவலாம்
எறிக்கும் வெயிலை அதற்குப் பாய்ச்சினேன்.

அல்லும் பகலும் வளர்ந்து வளர்ந்தே
அழகிய அப்பிட் பழத்தைத் தந்தேன்
இல்லில் இருந்ததை எதிரி கண்டான்,
என்பழம் என்பதும் அறிந்து கொண்டான்.

இருட்டுச் சூழ்ந்ததும் தோட்டத் துள்ளே
எவரும் காணா வகையில் நுழைந்தான்;
மரத்தின் கீழே காலையிற் கிடந்த
மாற்றான் உடலை மகிழ்வுடன் கண்டேன்.

" ஒரு வரம் " தொகுப்பில் இருந்து: 1964.

**Appreciation.**

The central idea of the poem is: 'harboured anger begets ruin'. The poem deals with the theme of the evil consequence of fostered anger. The poet contrasts the anger he bore towards his friend with the animosity that he carried in his heart towards his enemy.

The development of the harboured wrath is compared to a growing tree. The metaphor suggested by the word 'grow' in the last line of the first stanza is sustained in the second and third stanzas.

The supply of details such as the condition of growth – water and sun and the time space indicated by night and day – makes the description picturesque and clear. The association of personal reactions 'fears and tears' and 'smiles and wiles' makes the poem appealing and telling:

The tree bears an apple. This remindus of the 'Forbidden Fruit' of the biblical fame by the eating of which Adam and Eve were expelled from the Garden of Eden.

In this poem the apple stands for the temptation to take revenge. It signifies the plot that the anger helps to invent, and the defeat that overtakes the enemy by eating the fruit. The last line tells us that the narrator felt happy when he saw his enemy lying dead. This shows the inhuman nature of a person who is subjected, to anger. The poem provides us the message that anger makes us heartless brutes:

மலை ஏறியவருக்கு ...

வீட்டின் மாடிப்படி !!!

Sir Edmund Hillary ஓர் நியூஸீலாந்து நாட்டவர் . இவரே முதன் முதல் இமைய மலைத் தொடரினது Mount Everest ல் ஏறிச் சாதனை படைத்தவர் .

இங்கிலாந்தில் Chelsea (செல்ஸீ ) என்னும் ஊரில் வசித்த பெண்மணி ஒருவர் கூறினாராம் : " ஸேர் எட்மண்ட் எமது வீட்டினது மேல் மாடியில் வசித்து வந்தார்.

சில காலத்திற்குப் பின்னர், மாடிப் படிகளில் ஏற இயலாதென, அவர் வீட்டை விட்டுப் போய் விட்டார்.''

ஆதாரம் :- Robert Robnison தலைமையில் நடக்கும் BBC யினது "Brain of Braitain '' என்னும் வினா விடைப் போட்டியில் கேட்டது.

R. S Aravinthan
Paris, France

# வணிகக் கல்வியும் கணக்கீடும்
# BUSINESS STUDIES AND ACCOUNTING

திரு. S.D.J.சுதர்சன்

தரம் 10,11 க்கு புதியபாடத்திட்டம் அறிமுகப்படுத்தியும் வணிகக்கல்வியும் கணக்கீடும் சம்பந்தமாக அரச பாடநூல் இல்லாதுள்ளது. இதனால் அல்லலுறும் மாணவ ஆசிரிய சமூகத்திற்கு உதவும் முகமாக இக் கட்டுரைத் தொடரினை கட்டுரை ஆசிரியர் உவந்தளிக்கிறார். இது A/L மாணவர்களும் பயன்படுத்தக் கூடிய முறையில் விசேடமாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

கணக்கீடு கட்டுரை ஆசிரியர்:

திரு **S.D.J.சுதர்சன்** யாழ்நகரில் கணக்கீடு கற்பித்தலில் குறுகிய காலத்தில், வணிகத்துறை மாணவரது மனதில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளார். இவர் தேசிய கணக்கியல் டிப்ளோமா [HNDA] , மற்றும் யாழ் திறந்த பல்கலைக்கழகத்தினது **"சிறு வாணிப முகாமைத்துவம்"** [ESBM] ஆகிய கற்கை நெறிகளை சிறப்பு நிலையில கற்றுள்ளார். அத்துடன் யாழ் பல்கலைக்கழக **"வணிகமானி"** வெளிநிலை [B.COM] இறுதி ஆண்டில உள்ளார். கடந்த ஐந்து வருடங்களாக இவரிடம் **கணக்கீடு** கற்ற பல மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளனர்.

வணிகவியல் மாணவர்கட்கு இவர் 'ஆற்றல;' மூலம் விசேடமாக தொகுத்தெழுதும் கட்டுரைகள் மிகவும உபயோகமாக இருக்கும்.

மிகச்சொற்ப வயதினரான **'சுதர்சன்'** தன்னலமற்ற சேவை மனப்பான்மை கொண்ட திறமைசாலி. இவரது ஆக்கங்களை ஆற்றல் மூலம் பெற்று பயன் அடைவீர்களாக!

- ஆற்றல் ஆசிரியர்.

## வணிகப்பின்னிணியும் வளர்ச்சியும் அலகு – 01

## வணிகத் தொழிற்பாடு - FUNCTIONS OF BUSINESS :

மனிதத் தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்யும் எல்லாக் கருமங்களையும் வணிகத் தொழிற்பாடு என்கின்றோம். உற்பத்தி , பணம், வங்கி, போக்குவரத்து, தொடர்பாடல், களஞ்சியப்படுத்தல், விற்பனை மேம்படுத்தல், முகாமை செய்தல் போன்றவற்றின் ஆரம்பமும் வளர்ச்சியும் வணிகத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பங்களித்துள்ளன.

**வணிகம் - Business:**

வர்த்தகம், உற்பத்தி, விநியோகம், சந்தைப்படுத்தல் போன்ற கருமங்களை உள்ளடக்கியதே 'வணிகம்' ஆகும்.

**வர்த்தகம் - Commerce:**

வியாபாரத்தையும் அதனுடன் இணைந்த துணைநிலைச் சேவைகளையும் உள்ளடக்கியதே 'வர்த்தகம்' ஆகும்.

**வியாபாரம்: Trade:**

பண்டங்கள் சேவைகளை வாங்குதலும் விற்றலுமே வியாபாரம் ஆகும். இவை பணப்பெறுமதி அடிப்படையில் இடம்பெறும்.

**துணைச்சேவை : (உதவிச்சேவை).**

வியாபாரத்தை மேற்கொள்ள உதவும் போக்குவரத்து, காப்புறுதி, விளம்பரம், வங்கியும் பணமும், களஞ்சியம், தொடர்பாடல் போன்றவற்றை உள்ளடக்கியதே துணைச்சேவை ஆகும்.




**தேவைகள் : Needs:**

மனிதன் உயர்வாழ்வதற்கு அவசியமானதும் மிக முக்கியமாக ஏற்படக்கூடிய உடல் உள ரீதியான இயல்பூக்க நிலமைகள் தேவைகள் எனப்படும். தேவைகள் பல்வேறு வகையானதாகவும் அவை வரையறுக்கப்படாததாகவும் காணப்படும்.

உதாரணம்: உணவு, உடை, வீடு என்பன அடிப்படைத் தேவைகள் ஆகும்.

**விருப்பங்கள் - Wants:**

மனிதன் தனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு உள்ளங்களில் ஏற்படக்கூடிய ஆசைகள் 'விருப்பங்கள்' எனப்படும்.

உதாரணம்: உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு சோறு, பிட்டு, இடியப்பம், பாண், கேக் போன்ற விருப்பங்கள் ஏற்படலாம்.

விருப்பங்களைத் தீர்மானிக்கும் காரணிகள்

i). பொருளாதார நிலமை. (கொள்வனவு வலு)

ii). விளம்பரம்.

iii).கண்காட்சிகள்

iv).அன்பளிப்புக்கள்.

v). போட்டி நிறுவனங்கள்.
vi). போக்குவரத்து
vii). தொடர்பாடல்.
viii). கலாச்சாரம்.
ix). சமயம்.
x). நாகரீகம்.

**மனிதன் விருப்பங்களை நிறைவேற்றிக் கொண்ட முறைகள்:**

01). **நேர் உற்பத்தி மூலம்:**
மக்கள் தமது விருப்பங்களை நிறைவு செய்து கொள்வதற்கு தேவையானவற்றைத் தாமாகவே உற்பத்தி செய்து பயன்படுத்தல் நேர் உற்பத்தி எனப்படும்.

02). **நேரில் உற்பத்தி மூலம்;**
மக்கள் தமது தேவை விருப்பங்களுக்கு மேலதிகமாக பொருட்களை உற்பத்தி செய்து தமது தேவையினை பூர்த்தி செய்த பின் சந்தைக்கு அனுப்புதல் **நேரில் உற்பத்தி** எனப்படும்.

(03) **சந்தை முறை**
மக்கள் தமக்கு தேவையான பொருட்களை சந்தையில் கொள்வனவு செய்வதன் மூலம் பூர்த்தி செய்வதே **சந்தைமுறை** எனப்படும்.

பொருட்கள் - GOODS
கண்ணால் பார்த்து தொட்டுணரக்கூடியதும் களஞ்சியப்படுத்தி வைக்கக்கூடியதுமானவை **பொருட்கள்** ஆகும்.
**உதாரணம்** -: துவிச்சக்கரவண்டி

**சேவைகள் - SERVICES :**
கண்ணால் பார்த்து தொட்டுணர முடியாததும் களஞ்சியப்படுத்தி வைக்க முடியாததுமானவை **சேவைகள்** ஆகும்.
உதாரணம் :- வைத்தியர் சேவை

**இலவசப்பொருட்கள் -:**
மனித முயற்சி எதுவுமில்லாமல் உற்பத்தி செலவு, விலையின்றி இயற்கையாக கிடைக்கும் கொடைகள் **இலவசப்பொருட்கள்** எனப்படும்.
உதாரணம். :- நாம் சுவாசிக்கும் காற்று, பருகும் ஆற்றுநீர்.

**இலவசப்பொருட்களின் சிறப்பியல்புகள்.**
i). மனித முயற்சியின்றிக் கிடைத்தல்.
ii). உற்பத்திச் செலவு இல்லை.
iii). விலை இல்லை.
iv). இயற்கையாகக் கிடைத்தல்.
v). அருமையின்றித் தேவைக்கு மேலதிகமாகக் கிடைக்கும்.
vi). ஒருவரது நுகர்வு ஏனையோரைப் பாதிக்காது.

( தொடர்ச்சி 28 ஆம் பக்கம் )

# காப்புறுதி

> எமது 11 வது இதழான 2000 மாசி மாதம் வெளிவந்த சஞ்சிகையில் இக்கட்டுரை பிரசுரிக்கப்பட்டு, தொடர்ந்து வெளிவருகின்றது.
>
> பலராலும் வரவேற்கப்பட்ட இக் கட்டுரையை அச்சுவேலி அருளாந்தம் கிறிஸ்ரி எழுதியுள்ளார். இவர் காப்புறுதிக்கூட்டுத்தாபனத்தின் முன்னாள் உத்தியோகத்தர்.

## காப்புறுதியில் விரும்பிப் பெறக்கூடிய துணை அனுகூலங்கள் அல்லது நன்மைகள்

பெரும்பாலான காப்புறுதித் திட்டங்களில் மேலதிக கட்டணத்தை செலுத்திக் கீழ்க்காணும் துணை அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. விபத்து மரண அனுகூலம்

விபத்தினால் மரணம் சம்பவிக்கும்போது மேலதிக நன்மைகள் வழங்கி காப்புறுதித் திட்டத்தை பலரும் விரும்பச் செய்வதாகும். விபத்தினால் மரணம் சம்பவிக்குமிடத்து காப்புறுதித் தொகையின் இரட்டி மடங்கு வழங்கப்படும்.

2. நீடித்த, நிலையான இயலாமை அனுகூலம்

இவ் அனுகூலத்தை வழங்குவதன் நோக்கம் விபத்துக்காரணமாக நிலையானதும் பூரணமானதுமான இயலாமை ஏற்படுமிடத்து மேலதிக நன்மைகள் வழங்கி ஆயுட்காப்புறுதியை மேலும் கவர்ச்சிகரமானதாக்குவதேயாகும். இதன்மூலம் நிலையான பூரண இயலாமை ஏற்பட்டவிடத்து,

அ) மேற்கொண்டு தவணைக்கட்டணங்கள் செலுத்தத் தேவையில்லை.

ஆ) காப்புறுதித் தொகைக்கு சமனானதொரு தொகை 10 வருடத்திற்கும் பகிர்ந்து வழங்கப்படும்.

இ) மேற்படி 10 வருட காலத்திற்குள் இறப்பால் அல்லது காப்புறுதி முதிர்ச்சியால் உரிமைக் கோரிக்கைத் தொகையுடன் மிகுதியாக உள்ள மிகுதி இயலாமைத் தொகையும் சேர்த்து வழங்கப்படும்.

3. குடும்ப பாதுகாப்பு அலகு அனுகூலம்.

மிகவும் குறைந்த தவணைக் கட்டணத்துடன் மேலதிக ஆயுட் பாதுகாப்பை வழங்குவதன் மூலம் ஆயுட் காப்புறுதியை மேலும் விரும்பிப் பெறக்கூடியதாகச் செய்வதே குடும்பப் பாதுகாப்பு அலகு அனுகூலமாகும். இதன் மூலம் காப்புறுதிதாரர் விபத்தினால் மரணமடையுமிடத்து காப்புறுதித் தொகையின் இருமடங்கும் மேலதிக அனுகூலமாக இத்துணை அனுகூலத்தின் மூலம் பெறப்பட்ட தொகையும் சேர்த்து வழங்கப்படும்.

4. "தீவீசுவ"

கடுஞ் சுகயீனக் காப்புறுதி அனுகூலம்

கடும் நோய் வாய்ப்பட்ட காப்புறுதிதாரர் ஒருவர் அதிகளவிலான மருத்துவச்செலவுகளையும் மருத்துவ பராமரிப்புக் கட்டணங்கள் வாழ்க்கை மாற்றத்தால் ஏற்பட்ட ஏனைய மருத்துவச் செலவுகளையும் சமாளிக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் அப்பணத்தொகையை வழங்க உதவுவதே இவ்வனுகூலத்தின் நோக்கமாகும். இது பத்து வகையான கடும் நோய்களின் பொருட்டு பாதுகாப்பு பெற்றுத்தரும்.

5. "ஜெசந்த"

வாழ்க்கைத் துணைப் பாதுகாப்பு அனுகூலம்.

காப்புறுதித் தொகையின் 4 மடங்கு வரையான தொகைக்கு வாழ்க்கைத் துணையின் ஆயுள் மீது இக்காப்புறுதிப் பாதுகாப்பு அனுகூலத்தை பெற வழி வகுக்கின்றது.

6. "ஆரோக்கிய"

வைத்தியச் செலவின் பாதுகாப்பு அனுகூலம்.

இது ஏதேனும் நோய் அல்லது விபத்துக் காரணமாக அரச ஆஸ்பத்திரியில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை அல்லது வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நாட்களிற்கு நாளாந்தம் கொடுப்பனவைப் பெற்றுத்தரும் காப்புறுதி மேலதிக அனுகூலமாகும். இத்திட்டத்தின் கீழ் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நாளொன்றிற்கு ஆகக்கூடியது 5000/= வரையும் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுமிடத்து நாளொன்றிற்கு ரூ.10, 000/- வரையும் வழங்கப்படும். இது ஒவ்வொருவர் வாழ்விற்கும்.

7. சுவர்ண யஜந்தி அனுகூலம்.

சேமிப்புத்திட்டமே இதன் பிரதான நோக்கமாகும். இது ரூ.20000/- கொண்ட அலகுகளாகவே வழங்கப்படும். ஒருவர் தனது காப்புறுதித்தொகையின் 04 மடங்கை அல்லது அதி உயர் தொகையான 4 மில்லியன் ரூபாவைப் பெறலாம். இரண்டு வருடம் பணம் செலுத்திய பின்பு இத்திட்டத்தில் செலுத்திய கட்டுப்பணத்தின் அரைவாசியையும் அதற்குரிய வட்டியையும் மீளப்பெற முடியும்.

அடுத்த இதழில் :
"விபத்தபாய காப்புறுதிகள்" தொடரும்

( 05ம் பக்கத்தின் தொடர்...)

7) **Macedonia** — முன்னாள் Yugoslavia கூட்டமைப்பு நாட்டினது ஓர் அங்கம். இன்னோர் அங்கமான Kosovo வினது 'அல்பேனிய' கெரிலாக்கள் மேஸடேனியா வினது வடமேற்குப் பகுதியில் 12 கிராமங்களை ஆக்கிரமித்தனர். மேஸடோனியாவில் உள்ள அல்பேனியா மக்களுடன் சேர்ந்து கோசோவோ வுடன் மேஸடோனியாவை இணைப்பதே இவர்களது நோக்கம்.

"கோஸோவோ அல்பேனிய" கெரிலாக்கள் எல்லை ஒப்பந்தங்களை மீறியுள்ளனர் என NATO நாடுகளும் ஐரோப்பிய நாடுகளும் கூறுகின்றன.

8) Federal Bereau of Investigation ( FBI ) :
அமெரிக்காவினது உள்நாட்டுக்குற்றங்களைப் துப்பு துலக்கும் அமைப்பு. இதில் Robert Hanssen 25 வருட காலமாக சேவை புரியும் உயர் அதிகாரி.

ரஸ்யாவிற்கு 15 வருட காலமாக முக்கியமான இரகசியங்களை கொடுத்தார் என நேரடியான சாட்சியங்களுடன் இவ் வருட 2ம் மாதம் பிடிபட்டார். இதனைத் தொடர்ந்து அமெரிக்காவில் இருந்து 50 ரஷ்ய ராஜதந்திர அலுவலர்கள் நாடு கடத்தப்பட்டனர். பதிலடியாக ரஷ்யா 50 அமெரிக்க ராஜதந்திர அலுவலர்களை நாடு கடத்தியது.

இவ் வகையான நாடு கடத்தல்கள் பரஸ்பர சுமுக உறவுகளைப் பாதிக்காது. உளவு பார்ப்பது சகஜமான விஷயம், பிடிபட்டால் தண்டனை! அவ்வளவு தான் !!

9) United States of America ( USA ) :
அமெரிக்காவினது 6,000 தொன் Greenville எனும் நீர் மூழ்கிக் கப்பல் பசுபிக் சமுத்திர ஹாவாய்த் தீவுகளுக்கு அண்மையில், திடீரென வெகு வேகமாக மேற் பரப்பிற்கு விரைந்தது.

Ehime Maru என்னும் 58 மீற்றர் நீளமான ஜப்பானிய கப்பலினது அடித்தளத்தில் நீர் மூழ்கி மோதியதால், ஓர் சில நிமிடங்களில் கப்பல் தாழ்ந்தது. இவ் விபத்தில் 9 ஜப்பானியர் உயிர் இழந்தனர்.

நீர் மூழ்கியின் Sonar Data ( ரேடார் ) கருவியை இயக்கிய மாலுமி, 3,700 மீற்றர் தூரத்தில் ஓர் கப்பல் மேற்பரப்பில் செல்வதை தான் 'ரேடார்' கருவியில் அவதானித்ததாகவும், ஆனால் இதனை தனது கொமாண்டருக்கு அறிவிக்க நீர்மூழ்கியில் பயணித்த உத்தியோகபற்றற்ற 16 நபர்கள் இடையூறாக இருந்தனர் என்றும் கூறினார்.

இப் 16 நபர்களை உல்லாசப் பயணிகளாக ஓர் இளைப்பாறிய அமெரிக்க கடற்படை உயர் அதிகாரியே உத்தியோக அனுமதி இல்லாது ஏற்பாடு செய்துள்ளார். இது ஓர் புதுவிதமான ஊழல் எனத் தெரிகின்றது.

10) USA- இவ் வருடம் APRIL மாதம் 1 ம் திகதி யப்பான் நாட்டினது ஓகினாவா தீவில் உள்ள அமெரிக்க கடற்படை தளத்தில் இருந்து வேவுபார்க்கும் விமானம் தென் சீனா கடல் மேல் பறந்து கொண்டிருந்தது .

இது 1969 ம் ஆண்டில் செய்யப்பட்ட, பழைய, 4 என்ஜின் கொண்ட "பொறொப்பலர்" ( Propellor ) விமானம். இதில் வேவு பார்க்கும் "எலக்றோனிக்" நவீன சாதனங்கள் உள்ளன. இவற்றை இயக்க 22 சிப்பந்திகள் இருந்தனர். அத்துடன் இரு விமானிகளும் சென்றனர்.

சீனா நாட்டு எல்லையில் இருந்து 110 கி..மீ. தொலைவில் பறக்கும் பொழுது, சடுதியாக சீனா நாட்டின் F—8 ரக இரு ஜெற் "சண்டை" விமானங்கள் தோன்றி 10 நிமிடம் பின் தொடர்ந்தன. ஒரு ஜெற் விமானம்

வேவு விமானத்தைக் கீழ்ப் பக்கமாக நெருங்கிப் பறக்கும் பொழுது இரண்டும் முட்டிக் கொண்டன.

வேவு விமானத்தின் ஒரு "பொறொப்பலர்" விமானத்தின் முன் பகுதி ஆகியவை சேதமடைந்தன. ஜெற் விமானமோ அடிபட்ட கரி வண்டுபோல் விமானியுடன கடலுக்குள் மூழ்கி மறைந்தது. பழுதடைந்த வேவு விமானம் தொடர்ந்து செல்ல இயலாது ' Mayday ' சமிக்கை ஒலிபரப்பி சீனாவினது **"ஹைனான்"** தீவின் விமானப்படை தளத்தில் தரையிறங்கியது .

Jiang Zemin, சீனா ஜனாதிபதி, தமது ஜெற் விமானமும், அதனது விமானியும் மறைந்ததற்காக அமெரிக்கா மன்னிப்பு கோர வேண்டும் என வற்புறுத்தினார்.

சர்வதேச பகுதியில் அபாயகரமாக அண்மித்து முட்டி மோதியதால் இவ் விபத்து ஏற்பட்டது. அதனால் மன்னிப்புக் கோர தேவையில்லை. சீனா உடனடியாக தரையிறங்கிய விமானத்தையும், 24 நபர்களையும் விடுவிக்க வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி **" ஜோர்ஜ் புஷ்"** அறிக்கை விட்டார்.

10 நாட்களாக மாறி, மாறி அறிக்கைகள் பறந்தன. கடைசியாக அமெரிக்க வெளி விவகார செயலாளர் "கொலின் பவல்" "மரணித்த விமானிக்காக துக்கபபடுகின்றேன்" என்றார். மறுநாள் 24 நபர்களும் விடுபட்டு தமது அமெரிக்க வீடுகளிற்குப் பறந்து சென்றனர். அவர்கள் எது வித குறையுமின்றி பராமரிக்கபபட்டிருந்தனர்.

11) Yugoslavia – முன்னாள் ஜனாதிபதி Slobodan Milosevic இவ் வருட 4ம் மாதம் அதிகார துஸ்பிரயோக குற்றங்களுக்காக கைதானார். Serbia வினது தலைநகரான Belgrade இல் உள்ள இவரது இல்லத்தை பொலிஸ் சுற்றி வளைத்தது. ஆயுதம் தாங்கிய சகாக்கள் பொலிஸ்காரரை நெருங்கவிடாது மறித்தனர். 'ஸ்லோபொடனின் மகள் தனது கைத் துப்பாக்கியால் ஆறு தடவை சுட்டாராம்.

பல மணித்தியால நெருக்கடி நிலையின் பின்னர், மிலோசவிச்' சரணடைந்தார்.

ஜனாதிபதியாக இருந்த காலத்தில் "பொஸ்னியா", "க்றோஸியா" பகுதிகளில் இயங்கிய 'சேர்பிய' பயங்கரவாதிகளுக்கு தனது திறைசேரியில் இருந்து பணத்தை வழங்கியதாக 'மிலோசவிச்' ஒத்துக் கொண்டுள்ளார். இப்போது **ஹேக்** நீதி மன்றில் ஆஜர் படுத்தி, விசாரணை செய்யப்படுகின்றார்.

12) Burma / Mayanmar – முதற் தடவையாக ஐ.நா. வினது மனித உரிமை மேற்பார்வையாளரை நாட்டிற்குள் இவ்வருடம் அனுமதித்துள்ளது.

13) Philipines –

முன்னாள் நடிகர், பின்னர் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டு இரு வருடங்களின் பின்னர் ஊழல் காரணங்களுக்காக பதவி நீக்கம் செய்யப்பட்ட ஜோசப் எஸ்ற்றாடா'' இப்போது கைது செய்யப்பட்டுள்ளார். எட்டு ஊழல் குற்றச் சாட்டுகளுடன் மரண தண்டனைக்குரிய 'பொருளாதார திருட்டு'' குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளார்.

14) Pakistan – முன்னாள் இரு தடவைகள் பிரதமரான Benazir Bhutto, 49 வயது, தற்போது England ல் சுயதேசப்பிரஷ்டம் நிமித்தம் வாழ்கின்றார்.

ஊழல் விவகாரங்களில் 1999ம் ஆண்டு நீதி மன்றினால் குற்றம் காணப்பட்டார். ஆனால், இப்போது, உயர்நீதி மன்றம் முன்னைய விசாரணை ஒழுங்கற்றது என தீர்ப்பளித்துள்ளது.

15) United Nations –

மனித உரிமை செயலாளர் Mary Robinson, 56 வயது, நேருக்கு நேர் தயக்கம் இன்றி தனது அபிப்பிராயங்களை சொல்பவர். Ireland நாட்டினது முன்னாள் ஜனாதிபதி.

'ஐ.நா' வில் தனது பகுதி சுமுகமாக இயங்குவதற்கு போதிய பணப் பங்கீடு இல்லாததால் தான் இராஜினாமா செய்வதாக அறிவித்தார். இதனைத் தொடர்ந்து 'ஐ.நா' செயலாளர் 'கோபி அனான் '(Ghana நாட்டவர்), வேறு பல நாட்டுத் தலைவர்களினதும் வேண்டுகோள்களினால் தொடர்ந்து பணியாற்றுகின்றார்.

16) USA-- இவ்வருடம் ஐ.நா' வினது மனித உரிமை குழுவில் அங்கம் வகிக்க அமெரிக்கா தெரிவு செய்யப்படவில்லை. இதனால் வெட்கித்த அமெரிக்கா, "ஐ.நா'' விற்கு தனது பங்குப் பணத்தைச் செலுத்த மறுத்து விட்டது.

பல விடயங்களில் தடுமாறும் அமெரிக்க ஜனாதிபதி 'ஜோர்ஜ்புஷ்'னது சின்னத் தனத்தை இம் மறுப்பு எடுத்துக் காட்டுகிறது. ஓர் TV பேட்டியில் இந்தியாவின் பிரதமர் யார் என இவரிடம் கேட்ட போது : 'பெனாஸீர் பூட்டோ', என்றாராம்!!

சர்வதேச செய்திகளை நாம் கூடியவரை அண்மைக்கால செய்திகளாகவே தர எத்தனிக்கின்றோம்.

ஆற்றல் இதழின் பதிப்பினை கணனி முறைக்கு மாற்றியதால், சில மாத கால தாமதம் ஏற்பட்டுள்ளது.
இக்காலகட்டத்தில் விடுபட்ட செய்திகளை இங்கு தந்துள்ளோம்.

(17) EAST TIMOR – கிழக்கு ரிமோர் ரின் தேசிய சபையினது ஜனாதிபதியாக Xanana Gusmao, வயது 55, தனது பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளார்.

இவர் பல வருட காலமாக கிழக்கு ரிமோரது சுதந்திரத்திற்காக, இந்தோனேஷியா அரசுக்கு எதிராக, கெரில்லா போரை வழி நடாத்தியவர்.

இக்காலத்தில் அரச துருப்புகளினால் பிடிபட்டு, ஜெனறல் சுகாற்றோ பதவி விலகும் வரை மறியலில் வாழ்ந்தவர்.

க்ஸானானா கஸ்மாஓ ஓர் தன்னலமற்ற பொதுஜனவாதி. தனது நாடு பெற்ற சுதந்திரத்தை உறுதிப் படுத்தி முன்னெடுத்துச் செல்ல விரும்பினார்.

ஆனால் அவரது கட்சிக்குள் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டு குளறுபடிகள் தோன்றின. இவற்றைச் சமாளிக்கும் முயற்சிகளில் தோல்வி கண்டார்.

நேர்மையான, ரோசமுள்ள கஸ்மாஓ பதவியே வேண்டாம் என விலகி விட்டார்.

(18) JAPAN – யப்பான் நாட்டினது புதிய பிரதமர் **Junichiro Koizumi** ஓர் முற்போக்குவாதி. இவரது மந்திரி சபையிலேயே முதன் முதலாக யப்பான் நாட்டிற்கு ஓர் பெண்மணி வெளிநாட்டு மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜுனிசிறோ கொய்ஸுமி தனது மந்திரி சபையில் மேலும் நான்கு பெண்களை முக்கிய பதவிகளில் நியமித்திருக்கின்றார்.

வெளிநாட்டு மந்திரியான **Makiko Tanaka** முன்னைய பிரதமர் ஒருவரின் மகள். இவர் சாதுரியமாகவும், துடுக்காகவும் பேசக்கூடியவர். அத்துடன், குட்டையைக் கிளறிவிடும் பாணியில் இயங்குபவர் எனப் பெரும்பாலும் கணக்கிடப்பட்டவர்.

(19) SOCCER – ஐரொப்பாவில் European Cup என்றும், Cup Winners Cup என்னும் இரு கால்பந்து (Soccer) போட்டிகள் விளையாடப்படுகின்றன.

ஒரு வருடத்தில் தனது நாட்டினது Champion Cup ஐயும், ஐரொப்பாவின் இரு Cup களையும் வென்ற அணி இங்கிலாந்தினது Manchester United ஆகும். இதுவே உலகின் மிகச் செல்வந்த Soccer Club.

இது போன்று இன்னுமோர் பிரபல்யமான அணி A.C, Milan ஆகும். தற்போதைய இத்தாலி நாட்டு செல்வந்தரான பிரதமர் வில்வியோ பெலுஸ்கோனி யே தான் இவ் அணியின் உரிமையாளர்.

(20) Israel – சென்ற வருடம் 09ஆம் மாதம் பலஸ்தீனர்களுக்கும் இஸ்றயேல் யுதர்களுக்கும் இடையில், வன்செயல் வெடித்தது. பலஸ்தீனர் ஆயிரக் கணக்கில் குழுமி கல் எறிவது வழக்கம். இஸ்றயேல் துருப்புக்கள் பதிலுக்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்வர்.

நூற்றுக் கணக்கில் பலஸ்தீனர் இறப்பதும், சில தற்கொலை குண்டுதாரிகளால் யூத மக்கள் இறப்பதும், பலஸ்தீன தீவிரவாத Hamaz, Hisbullah அமைப்புகளின் தலைவர்களை இஸ்றயேல் இராணுவம் குறிவைத்து தாக்கி அழிப்பதும் சென்ற பத்து மாதங்களாக சகஜமாக நடைபெறுகின்றது.

பலஸ்தீன தலைவர் Yassir Arafat இவரால் தனது மக்களது வன் செயலைக் கட்டுப்படுத்த இயலாது திணறுகிறார். அதே நேரம், இஸ்றயேல் இராணுவத்திற்கு தகுந்த பதிலடி கொடுக்கவும் இயலாது திண்டாடுகின்றார்.

**Ehud Barak** முன்னைய இஸ்றயேல் பிரதமர். இவர் தனது நாட்டில், தனது யூத இன மக்கள் தம்மைச் சுற்றியுள்ள அறேபிய மக்களுடன் விரோதமில்லாது சமாதானமாக வாழ வழி வகுக்கவென தனது நேசக்கரங்களை யாஸீர் அரபாத் இடம் நீட்டினார்.

அமெரிக்கா சென்று, முன்னைய ஜனாதிபதி பில் கிளின்ரன் அனுசரணையில் அரபாத் உடன் பேச்சு வார்த்தை நடாத்தினார். பலஸ்தீனர்களுக்கு முன்பில்லாத பல சலுகைகளை வழங்கினார். எவ்வளவோ விட்டுக் கொடுத்தார். இவ்வளவையும், போன Bus க்கு கை காட்டும் பாணியில் அரபாத் கரிசனைக்கு எடுக்காது புறக்கணித்தார்.

பலஸ்தீனர்களுக்கு மித மிஞ்சிய சலுகைகளை எகூட்பறாக் வழங்குகின்றார் என எண்ணிய யூத மக்கள் அடுத்த தேர்தலில் **Ariel Sharon** னை பிரதமராக தேர்ந்தனர்.

எறியேல் ஸறோன் பயங்கரவாத தன்மை கொண்டவர் என்பது சகலருக்கும் தெரிந்த விஷயம் ஒன்று.

சில வருடங்கள் முன்னர், இவர் இஸ்றயேல் இராணுவ ஜெனரலாக இருந்தபோது இவரது கட்டுப்பாட்டில் இருந்த இராணுவ அணி ஒரே சமயத்தில் இரு பலஸ்தீன அகதி முகாம்கள் உள்ளே சென்று பாரபட்சமின்றி சுட்டுத் தள்ளி ஏறத்தாழ 600 பலஸ்தீனர்களைக் கொன்றனர். வயோதிபர், பெண்கள், கர்ப்பிணிகள், குழந்தைகள் எனப் பாராது கொன்றனர்.

இக்கொலைகாரனது செயலை சகல நாடுகளும் அன்று கண்டித்தன. ஆனால் இன்று அவனையே யூத மக்கள் தமது பிரதமராக தேர்ந்துள்ளனர்.

ஏகூட் பராக் கும் ஓர் முன்னாள் இஸ்றெயேல் இராணுவ ஜெனரல் தான்! ஆனால், மனிதாபமான மனிதன் என சகலரும் கருதினர். இவர் ஓர் சமாதானப் பிரியர்.

மனம் போல வாழ்க்கை என்பர். பயங்கரவாதியை தலைவராகத் தேர்ந்த இஸ்றயேல் யூத மக்கள், இன்று அமைதியின்றி அச்சத்துடன் வாழ்கின்றனர்.

(முற்றும்)

( 08 ம் பக்க தொடர்ச்சி )

ஓர் உயர் மட்ட குடும்பத்தைச் சேர்ந்தவரது இக் கீழ்த்தரமானதெனக் கணிக்கப்பட்ட சூழ்ச்சியில் தோல்வியுற்ற Douglas Jardine சகல பத்திரிகையாளர்களாலும், தனது சமூகத்தவர்களாலும் பகிஷ்கரிக்கப்பட்டு அவமானப்பட்டார்.

Sir Don Bradman, இவ்வருடம் Febuary மாதம் 26ம் திகதி தனது 92ம் வயதில் காலமானார். இவரது சுருக்கமான வரலாற்றை இன்றைய இளம் கிறிக்கற் பிரியர்களுடன் பகிருவோம்.

சென்ற நூற்றாண்டுத் தொடக்கத்தில் 1908ம், ஆண்டு 08ம் மாதம், 27ம்திகதி பிறந்தார். சிறு வயதிலேயே Golf Ball ஒன்றை, நெளிவுகள் (Corrugated) உள்ள தண்ணீர் தாங்கி (Water Tank) மீது எறிபட்டு வரும் பந்தை Cricket Wicket ஒன்றினால் அடிப்பாராம். பந்தோ சிறியது., அடிக்கும் துடுப்பும் மெலிதானது, பந்து எறியப்படும் தளம் நெளிவுகளைக் கொண்டது. இவரது கண் பார்வை அபூர்வமானது , கால்களின் லாவகம் (Footwork) அற்புதமானது., பந்தை எதிர்கொள்ளும் போது எவ்வகையான பந்து வருகின்றது எனக் கணிக்கும் திறன் அபாரமானது. இவரது ஆரம்ப பயிற்சி முறையும் , ஓர் Batsman க்குத் தேவையான மும்முனைத் திறமைகள் இவரில் இயற்கையாகவே காணப்பட்டதால், இவர் தற்கால கிரிக்கற் வீரர்கள் இலகுவில் எட்ட இயலாத உச்ச நிலையை அடைந்தார்.

இன்றைய வீரர்கள் அனுபவிக்கும் நவீனப் பயிற்சி முறைகள் இவரது காலத்தில் இல்லை. தற்கால வீரர்களுக்கு கூடிய போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்பு உள்ளது. பொதுவாக இரணைச் சதங்களும் முச் சதங்களும் அடிப்போர் ஆடு களத்தில் முதலாவதாக, இரண்டாவதாக, அல்லது மூன்றாவதாக இறங்குபவர்களாகவே இருப்பர். ஆனால் BRADMAN, 5 வது நபராகவே பொதுவாக ஆடச் செல்வார்.

ஓர் முறை, Sydney மைதானத்தில;1947ம் ஆண்டு, 2வது 'ஆஸஸ் (சாம்பல்) ரெஸ்ற் நடைபெற்றது. நான்கு விக்கற் இழப்பிற்கு 159 ஓட்டங்கள் என்ற நிலையில், Sydney Barnes உடன் இணைந்தார், Don Bradman. இருவரும் சேர்ந்து 405 றன்ஸ் எடுத்த பின்னரே D B அவுட் ஆனார். 5வது விக்கற்றுக்கு இந்தச் சாதனை இன்றும் உள்ளது.

பாகிஸ்தான் நாட்டு ஹனீப் முகமட் என்னும் வீரர் 1958ல் மேற்கிந்திய தீவுகளில் 21 நான்குகளை அடித்து 337 றன்ஸ்களை 970 நிமிடங்களில் அடித்து முடித்தார். இதுவே கிறிக்கற் விளையாட்டினது மிக நீண்ட கால ஆட்டமாகும். இந்த ஒரு முச்சதம் Bradman னது இரு முச்சதங்களினது, (383 + 430நிமிடங்கள்) காலத்திலும் பார்க்க: 2 ½ மணித்தியாலம் கூடிய காலமாகும்.

மிகுதி 17 வது ஆற்றல் தரும்.

( 07ம் பக்க தொடர்ச்சி )

3:4 கடன்பட்டோர் பணம் சேகரிக்கும் காலம் -
## DEBTORS AVERAGE COLLECTION PERIOD

வருமதியாளர் எத்தனை நாட்களுக்கு ஒரு தடவை பணத்தினை செலுத்துகின்றார்கள் என்பதனை "கடன்பட்டோர் பணம் சேகரிப்பு காலம்" மூலம் அறியலாம்.

$$\text{கடன்பட்டோர் பணம் வசூலிப்பு காலம்} = \frac{\text{சராசரி கடன்பட்டோர்}}{\text{கடன் விற்பனை}} \times 365$$

அல்லது

$$\text{கடன்பட்டோர் பணம் சேகரிப்பு காலம்} = \frac{365}{\text{கடன்பட்டோர் புரள்வு விகிதம்}}$$

3:5 கடன்கொடுனர் சுழற்சி விகிதம் - CREDITORS TURN OVER RATIO .

சென்மதியாளர் ஒரு வருடத்தில் எத்தனை தடவைகள் பணம் செலுத்துகிறார்கள் என்பதனை அறிய உதவும் விகிதம் ஆகும்.

$$\text{சென்மதியாளர் புரள்வு விகிதம்} = \frac{\text{கடன் கொள்வனவு}}{\text{சராசரிக் கடன் கொடுனர்}}$$

3:6 கடன் கொடுனர் பணம் செலுத்தும் காலம் :

சென்மதியாளருக்கு எத்தனை நாட்களுக்கு ஒருதடவை பணம் செலுத்துகிறார்கள் என்பதனை இதன் மூலம் அறியலாம்.

$$\text{கடன்கொடுத்தோர் செலுத்தும் காலம்} = \frac{\text{சராசரி கொடுனர்}}{\text{கடன் கொள்வனவு}} \times 365$$

அல்லது

$$\text{கடன் கொடுத்தோர் பணம் செலுத்தும் காலம்} = \frac{365}{\text{சென்மதியாளர் புரள்வு விகிதம்}}$$

3:7 சொத்து புரள்வு விகிதம் - ASSET TURN OVER RATIO

நிறுவனத்தின் மொத்தச் சொத்து எத்தனை தரம் விற்பனையாக மாற்றப்படுகின்றது என்பதனை காட்டும் விதிதமே சொத்து புரள்வு விகிதம் ஆகும்.

$$\text{மொத்தச் சொத்து புரள்வு விகிதம்} = \frac{\text{விற்பனை}}{\text{மொத்தச் சொத்து}}$$

17ஆவது 'ஆற்றல் இதழில்' இணைப்பு விகிதங்களில 'இருந்து' முதலீட்டு விகிதங்கள் வரை இக் கட்டுரை தொடரும்.

( 09ம் பக்க தொடர் )

அடுத்ததாக எந்தெந்த நிபந்தனைகளின் அடிப்படையில் கடன் வழங்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்படல் வேண்டும். கடனைக் கட்டம் கட்டமாக அளிப்பதா, மீளளிப்புச் செய்யும் போது எவ்வளவு காலத்தில் எந்த அடிப்படையில் செலுத்தப்படல் வேண்டும் என்பதெல்லாம் தீர்மானிக்கப்படும். அடுத்ததாக ஒரு தொழிலுக்கான முழு முதலீட்டில் ஒரு குறிப்பிட்ட பகுதியாவது கடன் பெறுபவர் செய்ய வேண்டும். இல்லையேல் அவருக்கு அந்த தொழிலில் ஒரு ஈடுபாடு வராது. வங்கியிலிருந்து எடுத்த பணம் தானே என்ற அலட்சியமான மனோபாவம் ஏற்படக்கூடும். கடைசியாக வழங்கப்படும் கடனுக்கு என்ன பிணை எடுக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட வேண்டும்.

கடன் எடுக்க விண்ணப்பிக்கும் ஒருவர் வங்கியில் ஒரு கணக்கை வைத்திருத்தல் வேண்டும். ஆறு மாதங்களுக்காவது அக்கணக்கை அவர் திருப்திகரமான முறையில் நடத்தியிருக்க வேண்டும். அந்தக் கணக்கின் மூலமாகத்தான் அவருடைய நிதி நிலமையை வங்கி தெரிந்து கொள்ள முடியும்.

ஆனால் இதற்கு விதிவிலக்கு உண்டு. சுய தொழில் கடன் போன்றவற்றைக் கொடுக்கும் போது இந்த 06 மாதத் தகைமை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

கடன் விண்ணப்பதாரியை முகாமையாளர் அல்லது தகுதியுள்ள உத்தியோகத்தர் முதலில் நேர்காணும் போது மேற் கண்ட தகைமைகள் அவருக்கு உண்டா என்ற அனுமானத்திற்கு வரமுடியும். அத்துடன் செய்யப்போகும் தொழில், அதில் அவருக்குள்ள அனுபவம், பெறப்போகும் லாபம், அதில் குடும்பச் செலவு போக கடனை மீளச் செலுதத முடியுமா போன்ற விபரங்களையும் ஓரளவு தீர்மானிக்க முடியும். இதன் பின்னரே கடன் தொகை மீளளிக்கும் காலம் முதலியன தீர்மானிக்கப்படும். அத்துடன் தொழில் திட்டத்தை நேரடியாக பார்த்து ஒரு அறிக்கையையும் வங்கியின் உத்தியோகத்தர் ஒருவர் தயாரிப்பார்.

இந்தத் தொழில் திட்டம் தயாரிக்கப்படும் போது தொழிலுக்கான இடம், தண்ணீர் போன்ற ஏனைய வசதிகள், உள்ளீடுகள் கிடைக்கும் வசதி, சந்தைப்படுத்தல், போட்டித் தொழில்கள் அந்த இடத்தில் உள்ளனவா, சந்தையில் இப் பொருட்களின் விலை, மொத்த உற்பத்தி செலவு போன்ற விஷயங்கள் கவனத்திற்கு எடுக்கப்படும். உற்பத்தியாகும் பொருளை விற்கும் போது அதில் வரும் இலாபம் உற்பத்தியாளரின் செலவு போக வங்கிக் கடனையும் செலுத்த முடியுமா என்றும் கவனிக்கப்படும்.

எடுக்கும் கடன் அந்த நோக்கத்திற்காக செலவிடப்படுவதை உறுதிப்படுத்த, உள்ளீடுகள் வாங்கப்படும் நிறுவனத்துக்கு வங்கியினால் பணம் நேரடியாகச் செலுத்தப்படும். அத்துடன் தேவைக்கேற்ப கடனைக் கட்டம் கட்டமாக வழங்கும் நடவடிக்கைகளையும் வங்கி எடுக்கும். இப்படி வழங்கப்படும் போது தேவையில்லாத கடனை எடுக்காமலும், அதற்கான முழு வட்டியையும் அநாவசியமாகக் கட்டாமலும் இருக்க முடியும்.

மேற்குறிப்பிட்டவை வங்கி நடைமுறைகளின் அடிப்படையான விஷயங்களின் மிகவும் சுருக்கமான விளக்கமாகும். கடன் கொடுப்பதற்கான நிதியை வங்கி எங்கிருந்து பெற்றுக் கொள்கிறது? அரசாங்கம் கொடுத்ததா அல்லது வேறு நாடுகளிடமிருந்து பெற்ற உதவியா? இல்லவே இல்லை.

வங்கியில் வைப்புச் செய்யும் வாடிக்கையாளரின் பணத்தை தான் நாம் கடனாகக் கொடுக்கின்றோம். ஆகவே இது மக்கள் பணம். மக்களது பணத்துக்கு வங்கி ஒரு காவலன். அந்தப் பணத்திலிருந்து கடன்கள் கொடுத்தால் தான் வைப்புச் செய்தவர்களுக்கு வட்டி கொடுக்க முடியும். மற்றும் ஊழியர் வேதனம் போன்ற பிற செலவுகளையும் சமாளிக்க முடியும். கடன் பெறுபவர்கள் மென்மேலும் கடன்பெற்று வாழ்க்கையில் முன்னேற வேண்டுமெனில், எடுத்த கடனைத் திருப்பிச் செலுத்தும் மனப்பாங்கு வளர வேண்டும்.

வைப்புச் செய்தவர்களின் பணத்திற்கு அறங்காவலராக இருக்க வேண்டும். அதே நேரத்தில் அப்பணத்தைக் கடன் போன்ற துறைகளில் முதலீடு செய்து இலாபம் காட்டவும் வேண்டும். சமூக மேம்பாட்டிலும், அபிவிருத்தியிலும் அக்கறை காட்டவும் வேண்டும். இது தான் இலங்கை வங்கியின் நிலைப்பாடு. இதற்குச் சகல மக்களின் ஒத்துழைப்பும் மிக அவசியம்.

( முற்றும் )

## இப்படியும் சிலர்

சுமித்திரா, மெல்பேர்ண் நகர்.

நேரம் பத்து மணி. பக்கத்து மேசை பாமினி அக்காவை இன்னும் காணோம். ஓர் சில நிமிடங்களில் புன்சிரிப்புடன் பாமினி அக்கா வந்து சேர்ந்தா.

“வாற வழியிலயப்பா, ஓராளைச் சந்திச்சன், முந்த நாள் அவருடைய பென்ஷன் (Pension) அலுவல் செய்து குடுத்தனாம். எனக்கெண்டால் ஞாபகம் இல்லை. உப்பிடி எத்தினை Case பாக்கிறனான். எல்லாம் நினைவில் இருக்குதே?!’

‘அதுக்கென்னக்கா இப்ப , . . .’

‘இல்லையப்பா, அவர் கொன்வென்ற் றோட்டில இருக்கிற சங்கக்கடை மனேஜராம். . . . சீனி வேணும் எண்டால் நாலு கிலோ எடுத்துத் தாறன் எண்டார். . . . பின்னை, வீட்டை கூட்டிக் கொண்டு போய், 80/= ரூபாய் எடுத்துக் குடுத்திட்டு வாறன்’

‘ஓமக்கா இப்ப இருக்கிற தட்டுப்பாட்டிலை இரண்டு கிலோ சீனியை எத்தினை நாள் சமாளிக்கிறது?’

‘அதுதானேயப்பா, அந்த மனிசன் நல்ல மனிசனப்பா . . . . இங்கை கொண்டு வந்து தாறன் எண்டவர். . . . பாவம்.’ நேரம் நாலரை. அலுவலகம் மூடும் சமயம். பாமினி அக்காவுடைய சந்தேகம் தோய்ந்த முகம்.

‘என்ன மீரா, நாலரை ஆகுது. ஆளக் காணோம்?!’, என்றவாறு பக்கத்தில் வந்து நின்றா, பாமினி அக்கா. நிமிர்ந்தேன். முகத்தில் குழப்பம். இருவருக்கும் விளங்கிவிட்டது. இனி என்ன செய்வது? பெருமூச்சுத்தான் மிச்சம். அடுத்த நாள் தான் தெரியவந்தது கொன்வென்ற் றோட்டில் சங்கக்கடை இல்லை என்பது.

*　　　*　　　*

## உங்கள் கேள்விகள். !!!

1) கேள்வி:- ந.குலேந்திரன், சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.

சந்திரனில் காலடி வைத்த போது, 1969ல், Neil Armstrong கூறினார் : "இது மனிதனின் முதல் காலடி",அது போன்று மீண்டும் விண்கலத்தில் ஏறும் போது கூறிய வசனம் யாது? அதன் கருத்தென்ன?

பதில்:- விண்கலம் Eagle சந்திரனில் தரையிறங்கி, 6 1/2 மணி நேரத்தின் பின்னர் சந்திரனில் காலடி வைக்கும் போது, " That's One Small Step For a Man, One Giant Leap For Mankind ", என பிரகடனம் செய்தார், Neill, Alden Armstrong. அதாவது, " இது ஒரு மனிதனின் சிறிய காலடி, ஆனால் மனித குலத்திற்கு மாபெரும் தாவல்".
இதன் பின்னர் இவரோ,அல்லது சந்திரனில் காலடி வைத்த அடுத்த பதினொரு அமெரிக்க Astronauts வீரர்களோ, தமது விஞ்ஞான ரீதியா தகவல்களை பகிர்ந்து கொண்டனரே அன்றி, வேறெதையும் பிரத்தியேகமாக கூறியதாக தகவல் இல்லை. யாரிடமாவது இருந்தால் தாருங்களேன், ஏனையோருடன் பகிருவோம், நன்றி.

2) கேள்வி:- கே. ரவிரங்கராஜன் யாழ் நகர்.

14வது (தவறுதலாக 01 என அச்சிடப்பட்ட) "ஆற்றல்" இதழில் ஒரு இனிங்சில் 06 கச்சஸ்களை ஒரு விக்கற் கீப்பர் பிடித்து சாதனை படைத்தார் என்றீரே! ஆஸி நாட்டு விக்கற் கீப்பர் க்றௌற் (Wally Grout / 08 கச்சஸ்கள் பிடித்தாராமே ?

பதில்:- உண்மை தான். 06 கச்சஸ்களை ஒரே இனிங்ஸில் பிடித்தார் Australia நாட்டு Adam Gilchrist. இது ஒரு நாள் போட்டிகளில் ஐயா! A.. T. Wally Grout ஒரே இனிங்சில் 08 கச்சஸகள் பிடித்து Australiaவின் முதல் தர (First Class) ஆட்டமான Queensland எதிர் Western Australia, 1960ம் ஆண்டில், நடந்த போட்டியில் .

3) கேள்வி:- ச. தனேந்திரநாதன், கொக்குவில்.

கிரிக்கற் ஆட்டத்தில் " ஆஷஸ் " (Ashes) என்பது எப்படி உருவாகியது?

பதில்:- 1882ம் ஆண்டு 8ம் மாதம் 29ம் திகதி இலண்டன் ஓவல் மைதானத்தி England ய் Australia 07 ஓட்டங்களால் வென்றது. இதனை Sporting Times என்னும் பத்திரிகை கேலி செய்யும் நிந்தனைப் போக்கில் " இங்கிலண்ட் கிறிக்கற் உடல் தகனம் செய்யப்பட்டு சாம்பல் ஒஸ்றேலியாவுக்கு எடுத்துச் செல்லப்படும்" , என எழுதியது. அடுத்த முறை Australia செல்லவிருந்த England Captain Ivo Bligh ஓர் விருந்துபசாரத்தின் போது " நான் அந்த சாம்பலை மீளப் பெறுவேன் ", என்றார். England அம்முறை Australia வை வென்றது. Melbourne நகரில் சில நவ நாகரீக பெண்மணிகள் கடைசி ஆட்டத்தில் பாவித்த Bails களை எரித்து சாம்பலை ஆஸ்தி அடக்கும் பாண்டம் (URN) ஒன்றில் இட்டனர்..

இப்பாண்டம் சாம்பலுடன் ஓர் கண்ணாடிக் கூண்டினுள் Lord's மைதானக் கட்டிடத்தினுள் இருக்கிறது. இந்த " ஆஷ்ஸ் " England க்கும் Australia க்கும் இடையில் நடக்கும் ரெஸ்ற் போட்டிகளையே குறிக்கும் / எந்த அணி வென்றாலும் Lord's ல்லேயே கண்ணாடிக் கூண்டினுள் " ஆஷ்ஸ் " இருக்கும். (LIFCO அகராதியின் விளக்கம் சற்றுத் தவறானது).

4) கேள்வி:- மு. மொனிக்கா, மைலணி சைவ மகாவித்தியாலயம், சூராவத்தை, சுன்னாகம் .
உலகத்தை வழி நடாத்துவது சமயமா.? விஞ்ஞானமா.? காரணம். கொஞ்சம் சொல்லவும்.

பதில்:- திகதி, கையெழுத்து, இல்லாத ஒரு வசன சுருக்க கடிதம்.அனுப்பியுள்ளீர். சகல சமயங்களும் ஒன்றையே கூறுகின்றன. இருந்தும் அவற்றிற்குள் ஓர் போட்டி மனப்பான்மை தென்படுகின்றது. ஆதலால் இவை உலகத்தை வழி நடாத்த இயலாது. சூறாவளி, பூகம்பம், அனர்த்தங்களை விஞ்ஞானத்தால் தடுக்கவோ தவிர்க்கவோ இயலவில்லை. ஆகவே எனது அபிப்பிராயத்தின் படி இயற்கையே உலகத்தை வழி நடாத்துகிறது.

5) கேள்வி:- க.வரதன், தே.சே.வங்கி, பருத்தித்துறை.
ஆற்றல் சஞ்சிகை ஆங்கிலச் சொற்களை கையாள்வதில் வித்தியாசமாக உள்ளதே!

பதில்:- அரசு அண்ணாமலை அன்று சொன்னார். "தெற்கே செல்லச் செல்ல தமிழ் இனிக்கும்." அவர் யாழ்ப்பாணத்தையே குறிப்பிட்டார் என இன்னோர் இடத்தில் விளக்கினார்; சில உதாரணங்களைப் பார்ப்போம்; ஓர் புத்தகம் பரவலாக விற்கப்படுகிறது. "பாலாஜி ஈஸிவே டு ஸ்பீக் இங்கிலீஸ்". இதிலுள்ள "டு" என்பதை நாம் "ரு" என எழுதுவோம். சரி, இன்னொன்று: "T" என்பதை "டி" என்பார் அதை நாம் "ரி" என்போம். India Today என்னும் பிரபலமான சஞ்சிகையினது தமிழ் பதிப்பும் வெளிவருகிறது எப்படி? **"இந்தியா டுடே"** என்று தான். இதை நாம் "ருடெ" என்போம். எமக்கு Australia என்பது **அவுஸ்திரேலியா** ஆகாது **ஒஸ்ற்றேலியா** ஆகும்.

வரதரே அறிவிப்பாளர்கள் 'ஆல் இந்தியா' எனற காலம் மலையேறி இப்போது 'ஓல் இந்தியா' எனும் காலம் ஐயா இது!

ஏன் இந்த வித்தியாசம் என்றா கேட்கின்றீர்? தென் இந்தியாவில் Scotish (ஸ்கொற்லாண்ட்) ஆசிரியர்கள் ஆங்கிலம் படிப்பித்தனர். ஆவர்களது உச்சரிப்பு சற்று வித்தியாசம்.
வட இந்தியாவிலும், இலங்கையிலும் English (இங்கிலண்ட்) ஆசிரியர்கள் படிப்பித்தனர். இருந்தும் எமது மலையகத்திலும் சற்று "தமிழ் நாடு" கைங்காரியம் தோற்றும்.

( தொடர்ச்சி 31 ஆம் பக்கம் )

( 14ம் பக்க தொடர் )

**பொருளாதாரப் பொருட்கள்.**

இயற்கையின் கொடையாக இருப்பினும் மனித முயற்சியின் மூலம் விலை கொடுத்து வாங்குவது 'பொருளாதாரப் பொருட்கள்' ஆகும்.
உதாரணம் : குழாய் நீர், நீரினுள் சுழியோடுபவர் சுவாசிக்கும் காற்று.

**பொருளியல் பண்டத்தின் சிறப்பியல்புகள்.**

i). மனித முயற்சியினால் கிடைத்தல்.
ii). உற்பத்திச் செலவு உண்டு.
iii). விலை உண்டு.
iv). அருமையாகக் கிடைத்தல்.
v). ஒருவரது நுகர்வு ஏனையோரைப் பாதிக்கும்.

**பிரித்தெடுக்கும் உற்பத்தி - Extractive Products :**

இயற்கையாக உள்ளவற்றை அல்லது இயற்கையாக உருவானவற்றை மனித உழைப்பு மூலமாகப் பயன்பாட்டுக்குரியதாக்குதல் பிரித்தெடுத்தல் உற்பத்தி எனப்படும்.
உதாரணம் :- விவசாயம்.

**ஆக்க உற்பத்தி - Constructional Products :**

பிரித்தெடுக்கப்பட்டவற்றை உருவாக்குதல் கோப்புச் செய்தல் மூலமாக பயன்பாட்டுக்குரியதாக்குதல் ஆக்க உற்பத்தி எனப்படும்.
உதாரணம் :- சட்டிபானை செய்தல், வீடமைத்தல்.

**நுகர்வுப் பொருட்கள் - Consumer Goods :**

நுகர்வுக்காக இறுதிப் பாவனையாளரால் அல்லது நுகர்வோரால் கொள்வனவு செய்யப்படும் பொருளை நுகர்வுப் பொருட்கள் என்பர்.

**கைத்தொழில் பொருட்கள் - Industrial Goods :**

இறுதிப்பாவனையாளருக்காக உற்பத்தி செய்யப்படும் பொருட்களில் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் தொடர்பானவை 'கைத்தொழில் பொருட்கள்'. எனப்படும்.

'நுகர்வுப் பொருட்களை பயன்படுத்தும் அடிப்படையில் வகைப்படுத்தல்' தொடக்கம் 'சந்தையின் வகைகள்' வரை 17வது ஆற்றல் இதழில் இக் கட்டுரை தொடரும்.

# ஜெற் விமானம் தோன்றிய கதை

ஆதாரம் : Reader's Digest March 1988.

ஜேற் என்ஜினுள் எரிபொருள் எரிந்து பின் நோக்கி வேகமாக வெளிப்படும். இவ் வெளியீட்டினால் உருவான உந்து விசையினால் விமானம் / வாகனம் முன்னோக்கி தள்ளப்பட்டுச் செல்கின்றது.

இம்முறையினாலேயே விண்வெளிக்கு உப - கிரகம (Satellites ) அனுப்பப்படுகின்றது.

அமெரிக்காவினது B – 17 Flying Fortresses, B – 24 Liberators ஆகிய விமானப் படைவிமானங்கள் மெத்தனமான அமைதியுடன் ஜெர்மன் நாட்டு பிரதேசத்திற்குள் பிரவேசித்தன. 3ம் மாதம், 1945ம் ஆண்டு! இரண்டாம் உலகப்போர் தொடங்கிய காலத்தில் இரு நாட்டு விமானங்களும் ஆகாயத்தில் ஒன்றை ஒன்று எதிர்த்து போர் புரிந்தன. பரஸ்பர விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. உயிர் நீத்த விமானிகளை புகழாரம் சூட்டிப் போற்றினர். சாகஸங்கள் செய்து எதிரி விமானங்களை சுட்டு வீழ்திய விமானிகள் பெரும் ஹீரோக்களாக மதிக்கப்பட்டுப் போற்றப்பட்டனர்.

அக் காலத்திய விமானங்கள் Propellors என்னும் விசிறிகளால் மட்டுமே உந்தப்பட்டுப் பறந்தன. விசிறிகள் இல்லாது பறக்க இயலாது. ஒவ்வொரு விசிறியையும் இயக்க ஓர் இயந்திரம் இணைக்கப்பட்டிருக்கும்.

தனி எஞ்சின்/ விசிறி விமானமும், இரு என்சின்கள்/ விசிறிகள் விமானங்களும், நான்கு விசிறிகள் கொண்ட விமானங்களும் பறந்து திரிந்தன. இரண்டாம் உலகப்போர் தொடங்கிய காலத்தில் ஜெர்மனிய விமானங்கள் பிரித்தானிய விமானங்களை எதிர்த்தன. ஜேர்மனியரது கூட்டு அணியில் இருந்த ஜப்பான் நாட்டு விமானங்கள், எதுவித அறிவித்தலும் இன்றி, கிறீஸ்த்தவர்களது அதிமுக்கிய பெருநாளாகிய “ கிறீஸ்துமஸ்'' நாளினது அதிகாலையில், Hawaii தீவினது அமெரிக்க கடற் படைத் தளமாகிய Pearl Harbour மீது தாக்குதலை நடாத்தி பல போர்க் கப்பல்களை அழித்தனர்.

இத்தகைய முறைகேடான தாக்குதலாலேயே: இரண்டாம் உலகப்போரில் ஜொர்மனி - ஜப்பான் இத்தாலி கூட்டுக்கு எதிராக, பிரித்தானியாவுக்குச் சார்பாக, அமெரிக்கா உலகப்போரில் இறங்கியது. பிரித்தானிய - அமெரிக்க விமானங்கள் ஒன்றாகச்சேர்ந்து, இலகுவில் ஜெர்மனிய விமானங்களை விரட்டியடித்தனர். ஒரு வருட காலமாக ஆகாயத்தில் எதுவித எதிர்ப்பபும் இன்றி மெத்தனமாக ஜெர்மனிக்குள் மிதந்தனர்.

மார்ச 18ம் திகதி, 1945ம் ஆண்டு கவலையின்றி பறந்த B 17, B 24 விமானிகள் அன்று கண்ட காட்சி அவர்களை கதிகலங்க வைத்தது. சடுதியாக 37 எதிரி விமானங்கள் தோன்றின. என்றும் காணாத மின்னல் வேகத்தில் பறந்தன. பல்டி அடித்தன. இடது கரையில் பறந்த விமானம் மேலே எம்பி மறைந்ததும் ... வலது கரையில் வந்து, சேர்ந்து, பறந்து, திக்குத்தெரியாத அமெரிக்க விமானியை சுட்டு வீழ்த்தியது.

அந்த முதல் நாளன்றே பதினெட்டு அமெரிக்க விமானங்கள் விட்டில் பூச்சிகள் போல் வீழ்ந்து மாண்டன. என்ன அதிசயம்! ? ஜெர்மனிய விமானங்களது முற் பகுதியில் பறக்கும் விசிறிகள் இருக்கவில்லை!! ஏதோவொரு துவாரமே காணப்பட்டது! பின் பகுதியில் இருந்து ... நீண்ட புகை வாலொன்று தோன்றி ஆகாயக் காற்றுடன் ஒன்று பட்டு மறைந்தது. கண் இமை மூடித்திறக்க முன்னர் தோன்றி மறையும் வேகம்!!!

ஜெற் விமானம் ஜெனித்து விட்டது. Propellor விமானத்தினது அரை நூற்றாண்டு கால ஆதிக்கம் அஸ்த்தமிக்கத்தொடங்கியது. உலகம் ஜெற் விமானத்தைக் கண்டது அன்றுதான்!

இரு நாடுகளில் வெவ்வேறு நபர்கள் ஒரே எண்ணக் கருவைக் கொண்டிருந்தனர். பிரித்தானிய பிரஜையான Frank Whittle 1929 ம் ஆண்டு விசிறிகள் இல்லாது, உந்துவிசையால் மிக வேகமாயும் , அதி உயரத்திலும் பறக்கும் விமானங்களை உருவாக்கலாம் என்றார். இந்த 22 வயதினரான பிரித்தானிய விமானப்படை உத்தியோகத்தரை எவரும் கருத்திற் கொள்ளவில்லை .

இது இவ்வாறிருக்க, 1934ம் ஆண்டில் 23 வயதினரான ஜெர்மனிப் பிரஜை Hans von Ohain என்னும் பௌதிகவியல் பல்கலைக்கழக மாணவன் , தனது பேராசிரியரிடம் , ஜெற் விமான எண்ணக் கருவை எடுத்துரைத்தான். பேராசிரியரும் அதனைச்சோதித்த பின்னர், விமானம் தயாரிக்கும் Ernst Heinkel என்பவருக்கு தனது மாணவன் ஹான்ஸ் வொன் ஒகேன் னை அறிமுகப்படுத்தினார். ஹின்கல் இவரை வேலைக்கு அமர்த்தி ஜெற்விமான ஆராய்ச்சிகளை இரகசியமாக வைத்திருக்கும் படி பணித்தார். ஜேர்மனியின் சர்வாதிகார அதிகாரிகள் தலையிட்டு குளப்புவார்கள் என்ற பயமே காரணம்.

1939ம் ஆண்டு 8ம் மாதம் 27ம் திகதி ஹின்கல் தயாரித்த உலகத்தின் முதல் ஜெற் விமானம் வெற்றிகரமாகப் பறந்தது. ஆனால் சர்வாதிகாரி ஹிற்லரது அதிகாரிகள் அதனை பார்ப்பதற்கு மறுத்துவிட்டனர். ஹிற்லரும் இப் புதுவித விமானத்தை ஏற்றுக்ககொள்ளவில்லை. ஏற்றிருந்தால் உலகின் சரித்திரமே திசை மாறியிருக்கும் . நாம் இன்று ஆங்கிலத்திற்குப் பதிலாக ஜெர்மன் பாஷையையே படித்துப் பாவித்திருப்போம் !

இரு வருடங்களின் பின்னர் 1941ம் ஆண்டு 5ம் மாதம் 15ம் திகதி பிறான்க் விற்ருள் தயாரித்த ஜெற் விமானம் வெள்ளோட்டத்தில் வெற்றி கண்டது. இருந்தும் பிரித்தானிய அரசு “விசிறி'' இல்லாது பறக்கும் விமானத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆனால் ஹின்கல் க்குப் போட்டியாக விமானம் தயாரிக்கும் மற்றுமோர் ஜெர்மனியரான Willi Messerschmitt ஓர் போர் ஜெற் விமானத்தை தயாரித்தார். Me 262 என்னும் இப் போர் விமானத்தை குண்டு பொழியும் விமானமாக மாற்றும் படி ஹிற்லர் கட்டளையிட்டார். அவரது கட்டளைகளில் அதி முட்டாள் தனமான கட்டளை இதுவேயாகும். இம் மாற்றத்திற்கு பத்து மாதங்கள் எடுத்ததால் நேச படைகள் நோர்மண்டி (Normandy) கடற்கரை ஊடாக பிரான்ஸ் நாட்டிற்குள் 1944ம் ஆண்டு 6ம் மாதம் புகுந்து ஜெர்மனிப் படைகளை விரட்டி அடிக்க ஏதுவானது.

இரு நாட்டிலும் புறக்கணிக்கப்பட்ட எண்ணக்கருவை 1948ம் ஆண்டு பிரித்தானிய அரசாங்கம் ஏற்றுக்கொண்டு பிறான்க் விற்ருள் கௌரவிக்கப்பட்டார். உலகப்போர் முடிவுற்றதும் வொன் ஒகேன் அமெரிக்கா வில் குடியேறினர். பிறான்க் விற்ருள் ம் அங்கு குடியேறினார்.

இன்று உலகத்தை வலம் வரும் ஜெற் விமானங்களை உருவாக்க காரண கர்தாக்களாகிய இவ்விருவரும் கடைசிக்காலத்தில் ஒருவரையொருவர் மதித்து நண்பர்களாக வாழ்ந்தார்களாம் , அமெரிக்காவில.

தொகுப்பு : சுப்ர. பவழராணி,
மீசாலை,
சாவகச்சேரி.

---

(27 ஆம் பக்க தொடர்)

6) கேள்வி:- தி. வசந்தகுமார்;, GTZ, யாழ் நகர்.

இவ்விடர் சூழலிலும் ஆற்றல் வெளிவருவது பாராட்டுக்குரிய விடயம்/ இச்சஞ்சிகை பொது அறிவு, மருத்துவ அறிவு கல்வியறிவு வேறு பல தரப்பட்டவைகளைத் தருகிறது. பொறுமையாக எழுதி வெளிப்படுத்தும் சேவை தொடர வேண்டும்.

பதில்:- நன்றி.

7) கேள்வி. ஆ. சுமித்திராதேவி, அச்சுவேலி.

படிப்பிலும், தொழிலிலும் பெண்கள் ஆண்களை விட மேம்பட்டவர்கள் என்கின்றேன்! உங்கள் கருத்து?

பதில்: மாணவர்களுக்கான இச் சஞ்சிகையை பெண் பாடசாலைகளில் 'கேட்டு வாங்கிப் படிக்கின்றனர்'. இது தற்புகழ் ஒருபுறம். . . மூன்றாம் உலக நாடுகளில் பெண்களே குடும்ப நலன் பேணுகின்றனர். ஆண்கள் தங்களது சுயநலம் காக்கின்றனர் என்றது 1995ம் ஆண்டு ஐ . நா. அறிக்கை ஒன்று.

இதனை ஆராய இரு வருட காலமாக, மூன்றாம் உலக நாடுகளில் தொழில் புரியும் பெண்களுடன், நேரடித் தொடர்பு கொண்டு, ஓர் புத்தகம் வெளியிட்டுள்ளார். Tobby Tuttile என்னும் அமெரிக்கப் பெண்மணி. ஏழைகளிலும் ஏழைகளான பெண்கள் துருக்கி நாட்டில் கம்பளம் நெய்கின்றனர். பாகிஸ்தானில் மணிமாலை செய்கின்றனர். பால் கறப்பதற்கென ஆடு, மாடு வளர்க்கின்றனர். இந்தியாவிலும், பங்களாதேஸ் நாட்டிலும். இப்பெண்கள் தமது குடும்ப நலத்தைப் பேணும்போது, தமது பிள்ளைகளது கல்வியையும் தவறாது கவனிக்கின்றனர்.

படிப்பறிவில்லாத ஆண்களோ, குடிபோதையில் நாள்தோறும் மூழ்க அவர்களது பிள்ளைகள் வறுமையில் தாழ்கின்றனர் என்கின்றது அவரது ஆய்வு நூல்.

8) கே: த. கஜரூபன், பருத்தித்துறை.
முன்பு பனிப்போர் காலத்தில் அமெரிக்காவும், ரஷ்யாவும் ஒன்றை ஒன்று சந்தேகக் கண்ணுடன் பார்த்தன. இப்போது ஏன் மீண்டும் ஒரு முறுகல் நிலை?

பதில்: விவேகமான கேள்வி! சர்வதேச செய்திகள் ஒழுங்காகப் படிக்கின்றீர் !. சோவியற் ஒன்றியம் தகர்ந்தது. பனிப்போர் நிலை படிப்படியாக மறைந்தது. இருந்தும் வேவு பார்ப்போரது தொழில் தொடர்ந்தது. குறிப்பாக தொழில் நுட்பங்களைத் திருடுவது. இத்தகைய துறையில் தான் இன்றைய ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் 15 வருட காலமாக தனது KGB (சோவியற் ஒன்றியத்தின் உளவுத் துறை) காலத்தில் கடமையாற்றினார்.

ஏவுகணைத் தாக்குதலுக்கு எதிராக அமெரிக்கா பாதுகாப்பு வலையம் உருவாக்க ரஷ்யா எதிர்க்கிறது. ஈரானுடைய எண்ணைக்குப் பதிலாக அணு உலை ஆலையை ரஷ்யா நிறுவிக் கொடுக்க அமெரிக்கா எதிர்க்கிறது.

அமெரிக்காவினது FBI/நிறுவனத்தின் 25 வருட சேவையாளர், உயர்தர அலுவலர் Robert Hanssen இவ் வருட 2ம் மாதம் கைதானார். 15 வருட காலமாக ரஷ்யாவிற்கு இரகசிய தகவல் கொடுத்தவர். முன்பு இவரது தகவலால் 3 ரஷ்ய உளவாளிகள் திருப்பி அழைக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டனர்.
இவருடன் சம்பந்தப்பட்ட இரு ரஷ்யர்கள் உடனடியாக அமெரிக்காவை விட்டு அனுப்பப்பட்டனர். மேலும் 4 நபர் 10 நாட்களுக்குள் வெளியேற வேண்டும் எனப் பணிக்கப்பட்டனர். எதிர்வரும் 7ம் மாதத்திற்கு முன்பாக 46 ரஷ்ய ராஜதந்திரி அலுவலர் வெளியேற வேண்டும் என அமெரிக்கா அறிவித்துள்ளது. இதற்குப் பதிலடியாக ரஷ்யாவிலிருந்து 50 அமெரிக்க இராஜதந்திரிகளை வெளியேற்றியுள்ளது.

இது முறுகல் நிலையா? இல்லை, சம்பிரதாயம். உளவு பார்ப்பது வழமை. பிடிபட்டால் ஏதாவதொரு நடவடிக்கை. Tit for Tat என்ற ரீதியில். அவ்வளவும் தான்! இதை சகல பத்திரிகைகளும் பெரிதுபடுத்தும் விநியோக வியாபார காரணங்களுக்காக.
ஜனாதிபதி புஷ் விளக்கியுள்ளார். ' இந்த நாடு கடத்தல் விவகாரத்தால் அமெரிக்க ரஷ்ய சுமுக நிலை பாதிக்கப்பட மாட்டாது'.
இதைத் தவிர உமக்கும் எனக்கும் என்ன தம்பி தேவை?!

9) கே: சந்திரகாந்தன், மகாராணி, மானிப்பாய்.
என்னை பொதுவாக எங்கு சென்றாலும் நான் ஒரு வித்தியாசமான பெண்பிள்ளை என்று கூறுகின்றார்கள். இது ஏன்? இது ஓர் குறையா?

பதில்: முன்னைய கேள்விக்கு நீரும் சம்பந்தப்பட்ட 'கூறுகின்றோரும்' தான் பதில் தர இயலும். மற்றதற்கு தத்துவஞானி PAUL WEISS (போல் வேய்ஸ்) கூறியதைக் கேளும். பிறரிலிருந்து வித்தியாசமாக இருப்பது பிழையல்ல என்ற கருத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

உண்மையில் நாம் ஒவ்வொருவரும் வித்தியாசமானவர்கள் தான். நியதியும் அவ்வாறே. நாம் ஒவ்வொருவரும் தனித்துவமான படைப்புக்களே', என்றார்.

10) கே : குலசேகரம் அறிவழகன், கோட்டைக்காடு, மல்லாகம். மல்லாகம் மகா வித்தியாலயத்தில் , 10ம் தரத்தில் கற்கும் எனது "பாரத தேசத்தின் அருள் தந்தை காந்தி அடிகள்" என்னும் ஆக்கத்தை அனுப்புகின்றேன்.

பதில்: மாணவர்க்கானது தான் "ஆற்றல்" எழுத ஆர்வம் உள்ளோர்க்கு உதவத்தான் 'ஆற்றல் . ஆனால், திரும்பத் திரும்ப பிரசுரித்த அறிவுறுத்தல்களை மீறுவோருக்கு அல்ல.

உமது 'ஆற்றல் புகழாரக் கவிதையை எப்படி ஏற்பது ? நூலகத்தில் ஆய்வு செய்து, ஆசிரியர் அல்லது எழுத்து அனுபவம் உள்ளவரது உதவியுடன், எமது விதிமுறைக்கு அமைய, எழுதவும். . . .

பதில் எதிர்பார்ப்போர் தபால் முத்திரை ஒட்டிய கடித உறை தவறாது அனுப்ப வேண்டும் !


# ஆற்றல் மென்மேலும் சிறப்புடன் வெளிவர எமது ஆசிகள்.

சர்வதேச சமகாலச் செய்திகள் மாணவ வர்க்கத்தினது பொது அறிவை வளர்க்கின்றது.

**கோப்பாய்**
**பனை தென்னை கூட்டுறவு சங்கம்**
**கோப்பாய்**

## "இந்தியா எதையுமே தரவில்லை ... "

இந்தியாவினது கணக்கியல் வல்லுனரான ராமானுஜம், இங்கிலாந்தின் கணக்கியல் வல்லுனரும் இன்றைய Amnestry International அமைப்பின் தந்தையுமான தத்துவஞானி Lord Bertrand Russel உடன் கதைத்துக்கொண்டிருந்தார்.

ரஸல் பிரபு, சடுதியாக, "இந்தியா உலகத்திற்கு பூஜ்ஜியமே தந்தது'' என்றார். இதைக்கேட்ட ராமானுஜம் கோபம் கொண்டார்.

"இல்லை, இல்லை, இந்தியா தான் உலகத்திற்கு ஸீரோ (Zero) தந்தது.

இந்த " 0 சைபர் இல்லாதபோது கணக்கியலே இல்லையே என்று தான் சொல்ல வந்தேன்" எனச் சமாதானம் கூறினாராம் **பேர்றண்ட்** ரஸல் பிரபு .

கவிதா சிவபாலன்,
கடற்றொழில் அபிவிருத்தி இலாகா,
யாழ்ப்பாணம்.


---

எமது வழமையான Bastian அச்சகத்தில் ஏற்பட்ட சடுதியான தலைமைத்துவ மாற்றத்தினால் .இவ் இதழில் "Stories With Kennard Uncle" வெளிவராதுள்ளது.

இத்தொடரின் 3ஆம் பாகம் அடுத்த இதழான ஆற்றல் 17 இல் தவறாது பிரசுரிக்கப்படும்.

ஆ/ ஆ...ர்

# கரன் பிறின்ரேஸ் & புத்தகசாலை



## சகலவிதமான கணனி சேவைகள்

## பாடசாலை உபகரணங்கள்

மற்றும்

## போட்டோ பிரதிகள்

## அடையாளஅட்டை, படங்கள்,

## ஏனையவை கவரிடுதல்,

ஆகியவற்றை

## குறைந்த கட்டணத்தில்

## பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்.

**கரன் பிறின்ரேர்ஸ் & புத்தகசாலை**
**303,303A, பலாலி வீதி,**
**பரமேஸ்வரா சந்தி,**
**திருநெல்வேலி ,**
**யாழ்ப்பாணம்.**

## தேசத்தின் சிறார்களுக்கு **இலங்கை வங்கி** வழங்கும் விசேட "**பொன் அரும்புக்கணக்கு**"

உங்கள் பாசத்திற்குரிய குழந்தைகளின் சுபீட்சகரமான எதிர்காலத்திற்கு இலங்கை வங்கியுடன் பொன் அரும்புக் கணக்கொன்றினை ஆரம்பித்து விட்டீர்களா? இல்லையேல் உடன் கணக்கொன்றினை ஆரம்பியுங்கள்.

18 வயதிற்குக் குறைந்த உங்களுடைய குழந்தைகளுக்காக அல்லது நீங்கள் கைகொடுத்துதவ விரும்பும் யாரேனும் ஒரு குழந்தைக்காக

- சாதாரண சேமிப்புக் கணக்குக்குரிய வட்டியை விட ஒரு வீதம் (1%) மேலதிக வட்டி.
- குழந்தைகளுக்காக கணக்கை ஆரம்பித்த பெற்றோர் / பாதுகாவலருக்கு ஏற்படுகின்ற ஆபத்துக்களின் போது ரூபா ஐந்து லட்சம் ( ரூபா.500,000/- ) உச்ச வரம்புக்கும் தீர்மானிக்கப்பட்ட காப்புறுதிக் கொடுப்பனவு.
- பெறுமதிமிக்க பரிசில்களை வென்றெடுக்க அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் கலந்து கொள்ளும் வாய்ப்பு
- வளர்ந்து பெரியவராகியதும் இலங்கையின் முன்னோடியான வங்கியுடன் நீண்டகால வாடிக்கையாளர் என்ற பெருமை
- சேமிப்பு பணத்திற்கு அரச வங்கியொன்றின் பூரண பாதுகாப்பு

குழந்தைக்கு 16 வயது பூர்த்தியானதும் கல்வித் தேவைக்காக முழுவட்டியுடன் பணத்தை மீளப் பெற்றுக்கொள்ளலாம்.

18 வயது பூர்த்தியானதும் வைப்பிலிட்ட முழுத்தொகையையும் வட்டியுடன் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகிய அனைத்து நன்மைகளையும் பெற்றுக் கொள்ள உங்களை நேசக்கரம் நீட்டி அழைக்கிறது.

உங்கள் தேவைகளுக்காகவே இயங்கும்

**இலங்கை வங்கி.**



வெளியீடு : யாழ் ஆற்றல் மேம்பாட்டு ஒன்றியம். 76, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
பதிவு : 1998 ஆம் ஆண்டு 08 ஆம் சட்டப்படி : "தொண்டர் சமூகசேவை நிறுவனம்".
இலக்கம் : ஜே / டிஎஸ் / எஸ்எஸ் / ஓமேஒ / 12-07-1999.
கணனி உத்திகள் : "கரன் பிறின்ரேஸ்" 303A, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 05 / 09 / 2001 வெளியிடப்பட்டது.